விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 224 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 15 திங்கட்கிழமை (31.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

### இலங்கை – இந்திய
## எரிபொருள் குழாய்த் திட்டம்
## ஓகஸ்டில் முதற்கட்ட ஆய்வுப் பணி

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான எரிபொருள் விநியோக குழாய் திட்டத்திற்கான செயற்பாட்டு ஆய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.



இந்தசெயற்பாட்டின்ஆய்வை ஓகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்க திட்டமிட் 15

## தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக இன்று போராட்டம்
### முன்னணி அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன் திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் குறித்து ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தையிட்டியில்தனியார்காணிகளை ஆக்கிரமித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்தை 15

## ஓமந்தையில் விபத்து; ஸ்தலத்தில் ஒருவர் பலி
### மற்றொருவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா ஓமந்தையில் அமைந்துள்ள இராணுவ சோதனைச் சாவடிக்கு அருகாமையில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதோடு மற்றொரு நபர் படுகாயமடைந்துள்ளார்.

சோதனைச் சாவடிக்கு அருகாமையில் நின்றிருந்த உழவு இயந்திரம் மற்றும் 15

# தேர்தலில் வென்ற பின் 13ஐ பற்றி பேசுங்கள்
### ரணிலுக்கு பெரமுன முட்டுக்கட்டை

(கொழும்பு)

**2024ஆம் ஆண்டு முதல் காலாண்டில் உத்தேசிக்கப்பட்டுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதன் பின்னர் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் குறித்துத் தீர்மானியுங்கள்.**

**அதுவரையில் அதிகாரப் பகிர்வு குறித்து பேசுவதற்கு மக்கள் ஆணை கிடையாது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உயர்பீடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தகவல் அனுப்பியுள்ளது.**

சர்வகட்சி மாநாட்டிற்கான ஜனாதிபதியின் அழைப்பை தொடர்ந்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உயர்பீடம் முன்னாள் நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

இதன்போது 13ஆவது திருத்தம் குறித்தும் அதிகாரப்பகிர்வு குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வகட்சி மாநாட்டை கூட்டி பேசுவது முறையல்ல என்ற விடயத்தை 16

## துப்பாக்கிச் சூடு ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கொழும்பு வாழைத்தோட்டம் மார்டிஸ் லேன் பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு 12 பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய ரவிந்த டில்ஷான் என்ற இளை 15

## ஆட்சி மாறியும் மக்கள் எதிர்பார்ப்பு ஏதும் நிறைவேற்றப்படவில்லை
### நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

ராஜபக்ஷர்கள் தலைமையிலான அரசாங்கத்தை மக்களாணையுடன் மீண்டும் தோற்றுவிப்போம். ராஜபக்ஷர்களை அரசியலில் இருந்து புறக்கணிக்க ஒருதரப்பினர் இன்றும் முறையற்ற வகையில் செயற்படுகிறார்கள் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ 15



## வரட்சி தொடருமானால் அரிசி தட்டுப்பாடு ஏற்படும்
### விவசாய அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

பல பிரதேசங்களில் நிலவும் வரட்சியான காலநிலை தொடருமானால் எதிர்வரும் பெரும்போகம் தோல்வியடைந்தால் நாட்டில் அரிசி தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அப்படி நடந்தால், தற்போதைய நிலைவரப்படி இந்தியாவில் இருந்து கூட அரிசியை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்படும் 15

### இலங்கை - இந்திய நிலத் தொடர்பு
## இந்திய இராணுவத்தின் வருகைக்கு வழிவகுக்கும்
### அரசியல் ஆய்வாளர் கருத்து

(கொழும்பு)

இலங்கை - இந்தியா இடையே தரைவழி பாலம் அமைக்கப்பட்டால், இந்திய இராணுவம் ஒரு மணி நேரத்துக்குள் இலங்கையை ஆக்கிரமிக்கும் என அரசியல் ஆய்வாளரும் புலனாய்வு செய்தியாளருமான எம். எம் நிலாம்டீன் தெரிவித் 16

### ஜனாதிபதித் தேர்தலில்
## ரணில் களமிறங்கினால் ஐ.ம.ச வெறிச்சோடிவிடும்
### அமைச்சர் ஹரின்



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் இடம்பெறுவது உறுதி. அதில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார் என்ற 16

## வல்லையில் தீ பரவல்



16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக இன்று போராட்டம்

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு அமைப்பின் ஏற்பாட்டில் தமிழ் மக்களுக்கான கௌரவமான அரசியல் தீர்வு கோரிய 100நாள் செயல் முனைவுச் செயற்பாட்டின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ் மாவட்ட செயலகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

குறித்த போராட்டமானது தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு நோக்கிய பயணத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாகவும் முன்னெடுக்கப்படுவதாகவும் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்துள்ளது. (4,7,30)

# அவசரகால கொள்வனவின் கீழ் அத்தியாவசிய மருந்துகள் கொள்வனவு

அவசரகால கொள்வனவின் கீழ், 270 அத்தியாவசிய மருந்துகள் மற்றும் பல் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

2021 ஆம் ஆண்டிலிருந்து பற் சிகிச்சை மருந்துகள் மற்றும் உபகரணங்கள் எவையும் கொள்வனவு செய்யப்படவில்லை. 2021 இல் கட்டளைகள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், விநியோகத்தர்கள் விலை திருத்தம் கோரியதால் கொள்வனவு இடம்பெறவில்லை.

இதனைக் கருத்திற்கொண்டு குறித்த கட்டளையை இரத்து செய்து புதிய கொள்வனவுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்தியர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, தற்போதுள்ள பற் சிகிச்சை மருந்துகள் மற்றும் உபகரணங்களின் பற்றாக்குறையை எதிர்வரும் 3 மாதங்களுக்குள் நிவர்த்தி செய்ய முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4,7)

# சாதனையாளர்களின் விபரங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ் பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் 200 ஆவது ஆண்டு விழாவை ஒட்டி இந்தப் பாடசாலையில் இருந்து ஓய்வு பெற்ற மற்றும் பத்து வருடங்களுக்கு மேலாக சேவையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மற்றும் தேசிய, மாகாண மட்டங்களில் வெற்றியீட்டிய சாதனையாளர்களின் விபரங்களும் பழைய மாணவர்களின் கட்டுரைகளும் ஆண்டு விழா மலரில் வெளியிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி விடயங்கள் தொடர்பான தங்களது விபரங்களை 077 814 3517 ஸ்ரீ கண்ணன் (பத்திராதிபர்), 077 456 1490 விஜயவாணி (செயலாளர்) ஆகியோர்களுடன் தொடர்பு கொண்டு தங்களுடைய விபரங்களை எதிர்வரும் 05.08.2023 ஆம் திகதிகளுக்குள் அறியத்தருமாறு 200 ஆவது ஆண்டு விழாச் சபையினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (4,7)

# கப்பல் விபத்திற்கான இடைக்கால கொடுப்பனவை வழங்க இணக்கம்

X-Press Pearl கப்பல் விபத்திற்கான இடைக்கால கொடுப்பனவை வழங்க கப்பல் நிறுவனத்தின் சட்டத்தரணிகள் இணங்கியுள்ளனர்.

சிங்கப்பூரில் அண்மையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில், இலங்கைக்கு நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டதாக சட்ட மா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.


கடல் சூழலைப் பாதுகாப்பதற்காகவும் விபத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காகவும் இந்த இடைக்கால கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இடைக்காலக் கொடுப்பனவு தொடர்பான விரிவான அறிக்கை எதிர்வரும் 2 வாரங்களுக்குள் கப்பல் நிறுவனத்தின் சட்டத்தரணிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

X-Press Pearl கப்பல் விபத்தினால் ஏற்பட்ட மொத்த சேதம் தொடர்பான சாராம்ச அறிக்கையை எதிர்வரும் 2 வாரங்களுக்குள் சட்டத்தரணிகளுக்கு அனுப்பிவைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிக்கைளை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை தயாரிக்கின்றது. (4,7)

# கண்ணீர் அஞ்சலி



யாழ்.பல்கலைக்கழக நண்பி கௌரி அவர்களின் அன்புத் தந்தையும் கோப்பாயைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட

**Dr.சுப்பிரமணியம் சந்திரசேகரா (துரை)**

அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்

**1989/ 90 யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவ நண்பர்கள்**

(C-6983)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு 03.07.2023 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**அமரர் முருகன் இராசாத்தி (பவளம்)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 31.07.2023 திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 02.08.2023 புதன்கிழமை காலை 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும். (16571)

அராலி தெற்கு,
காளி கோவிலடி.
தொ.பே : 077 555 8485

குடும்பத்தினர்

# வரவு - செலவுத் திட்டத்தில் வைத்தியர்களுக்கு சம்பள உயர்வு ஜனாதிபதி இணக்கம்

(கொழும்பு)

எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் வைத்தியர்களுக்கான கணிசமான சம்பள அதிகரிப்பை வழங்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே வைத்தியர் ஹரித அலுத்கே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சம்பளப் பிரச்சினை காரணமாக பல வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தூண்டப்பட்டுள்ளதாக சங்கத்தின் செயலாளர் டொக்டர் ஹரித அலுத்கே சுட்டிக்காட்டியுள்ளார்.

அதனை சரிசெய்வதற்காக அனைத்தையும் மீளாய்வு செய்து நிதியமைச்சுடன் பேசி, எதிர்வரும் வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக இது தொடர்பான முதல் ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார். அது ஏதோ ஒரு விசேடமாக மாறும் என்பதில் உறுதியாக உள்ளோம்.

இந்த முன்மொழிவுகளின் அடிப்படையில் மருத்துவர்களுக்கான சம்பள முறையை உருவாக்குவது அவசியம். என தெரிவித்தார். (4-7)

# புத்தளம் காட்டிலிருந்து வயோதிபர் சடலமாக மீட்பு

(புத்தளம்)

புத்தளம் - குருநாகல் வீதியின் மூன்றாம் கட்டைப் பகுதியில் வயோதிபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த காட்டுப் பகுதியில் நேற்று விறகு வெட்டச் சென்ற ஒருவர் சடலமொன்று காணப்படுவதை அவதானித்த நிலையில் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

அதனை தொடர்ந்து புத்தளம் பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டனர்.

குறித்த சம்பவ இடத்திற்கு பதில் கடமையாற்றும் நீதவான் இந்திக்க தென்னகோன் வருகை தந்து சடலத்தைப் பார்வையிட்டதுடன் சடலத்தை வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்க உத்தரவிட்டுள்ளார்.

புத்தளம் தம்பபண்ணி வீதியைச் சேர்ந்த 67 வயதுடைய ஆணொருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சடலம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தனர். (4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டி தீர்வையோ, தனிநாட்டுத் தீர்வையோ ஒருபோதும் வழங்க முடியாது-அரசு திட்டவட்டம்

(கொழும்பு)

**"தமிழ் மக்களும் தமிழ் அரசியல்வாதிகளும் விரும்பும் சமஷ்டி தீர்வையோ அல்லது தனிநாட்டுத் தீர்வையோ ஒருபோதும் வழங்க முடியாது" என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**



சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சர்வகட்சி மாநாடு தீர்வைக் காண்பதற்கான வழியாகும். ஆனால், இந்தக் கூட்டத்தில் பங்கேற்கும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் இன முரண்பாடுகளை மேலும் வளர்க்கும் விதத்தில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டிலுள்ள அனைத்து மக்களின் நன்மை கருதியே செயற்படுகின்றார்.

அவருடன் ஒன்றித்துப் பயணித்து அரசியல் தீர்வைக் காண்பதற்குத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் முயல வேண்டும். அதைவிடுத்து நடைமுறைக்குச் சாத்தியம் இல்லாத கருத்துக்களை வெளியிட வேண்டாம் என்று அவர்களிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

இந்த நாட்டில் சமஷ்டித் தீர்வுக்கோ அல்லது தனிநாட்டுத் தீர்வுக்கோ பாராளுமன்றம் ஒருபோதும் அனுமதி வழங்க மாட்டாது.

ஒற்றையாட்சிக்குள் அதிகாரங்களைப் பகிரும் வகையிலான தீர்வே இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் பிரச்சினை இல்லாத தீர்வு ஆகும்" என அவர் தெரிவித்தார். (நி)

## ஒன்பது வளைவு பாலத்தை காண குவியும் வெளிநாட்டவர்கள்



(பதுளை)

வரலாற்று சிறப்புமிக்க தெமோதர ஒன்பது வளைவு பாலத்தை காண வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் பெருமளவில் குவிந்து வருவதாக தெரிய வந்துள்ளது.

ரயில் கடக்கும் போது பாலத்தை ரயிலையும் புகைப்படம் எடுத்து வெளிநாட்டவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். (நி)

## இலங்கையின் கடன் மறுசீரமைப்பில் சாதகமான முடிவு எட்டப்பட்ட பின்னரே புதிய கடன் வழங்கப்படும்-ஜப்பான் அறிவிப்பு

(கொழும்பு)

ஜப்பானின் தற்போதைய கவனம், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயல்முறைக்கு முடிந்தவரை விரைவாகவும் சுமுகமாகவும் உதவுவதாக மட்டுமே இருக்கும் என ஜப்பானின் ஊடக மற்றும் ராஜதந்திர துறைக்கான பிரதிப் பணிப்பாளர் யுகிகோ ஒகானோ தெரிவித்துள்ளார்.

ஜப்பானிய அரசாங்கத்தால் நிதியளிக்கப்படவிருந்த, கைவிடப்பட்ட இலகு தொடருந்து போக்குவரத்து திட்டம் போன்ற குறிப்பிட்ட திட்டங்கள், ஜப்பானிய வெளியுறவு அமைச்சரின் பயணத்தின் போது விவாதிக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக இலங்கையின் கடன் மறுசீரமைப்பு முயற்சிகளில் சாதகமான முடிவு எட்டப்பட்ட பின்னரே புதிய கடன் வழங்கப்படும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

பொறுப்பான கடனளிப்பவர் என்ற வகையில், ஏற்கனவே



கடனில் உள்ள நாடுகளுக்கு கடன் வழங்கக்கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## புதிய அரசமைப்பு உருவாக வாய்ப்புகள் இல்லை - ரணில்

(கொழும்பு)

தற்போதைய நிலைமையில் அரசாங்கத்தினால் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

13ஆவது திருத்தம் தான் இறுதித் தீர்வா என கொழும்பு ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

13 ஆம் அரசியலமைப்பு திருத்தம் தான் இறுதித் தீர்வு என எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தான் கூறவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலைமையில், புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான சூழல் இல்லை என்றும் இருக்கின்ற அதிகாரங்களைக்கொண்டு தற்காலிகத் தீர்வை வழங்குவதே எனது நோக்கம் என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழ்க் கட்சிகளின் கோரிக்கைக்கு அமைவாக அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கு தான்



சம்மதம் தெரிவித்தாலும் பாராளுமன்றமே இறுதி முடிவை எடுக்க வேண்டும் என ஜனாதிபதி கூறியுள்ளார். (நி)

## இலத்திரனியல் கடவுச்சீட்டு வழங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தம்

(கொழும்பு)

அதிக செலவு ஏற்படுவதன் காரணமாக இலத்திரனியல் கடவுச்சீட்டு வழங்குவதை தற்காலிகமாக நிறுத்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஒரு இலத்திரனியல் கடவுச்சீட்டை தயாரிப்பதற்கு 20 அமெரிக்க டொலர்கள் செலவாவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருடாந்தம் குறைந்தது 750,000 கடவுச்சீட்டுகள் வழங்கப்படுவதாகவும் அதற்குத் தேவையான தொகை 15 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக இலத்திரனியல் கடவுச்சீட்டு முறை மீள ஆரம்பமாகும் வரை சாதாரண கடவுச் சீட்டை அச்சிட்டு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. (நி)

## ஆசிரிய சேவைக்கு புதிய பட்டதாரிகளை இணைக்க நடவடிக்கை-கல்வி அமைச்சர்

(கொழும்பு)

ஆசிரிய சேவைக்குப் புதிய பட்டதாரிகளை இணைத்துக் கொள்வது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகள் மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

விஞ்ஞானம், தொழில் நுட்பம், ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் ஆகிய பாடங்களில் புதிய பட்டதாரிகளை இணைத்துக் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, நீதிமன்றத்தின் தடை உத்தரவு காரணமாக ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களை ஆட்சேர்ப்பு செய்வது தாமதமாகும் என கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## மசகு எண்ணெய்யின் விலை மேலும் அதிகரிப்பு

(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை நேற்றைய தினமும் அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

இதன்படி, டபிள்யூ. ரி.ஐ மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 80.58 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

அத்துடன், பிரென்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 84.99 அமெரிக்க டொலராக அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

அதேநேரம் இயற்கை எரிவாயு பீப்பாய் ஒன்றின் விலையும் அதிகரிப்பை பதிவு செய்து 2.68 அமெரிக்க டொலராக காணப்படுகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 ஆவது உலகக் கிண்ண வலைப்பந்தாட்டத்தில் இலங்கையை வென்றது தென்ஆபிரிக்கா

கேப் டவுன் கொன்வென்ஷன் சென்டர் உள்ளக அரங்குகளில் நடைபெற்றுவரும் 16ஆவது உலகக் கிண்ண வலைப்பந்தாட்டத்தில் இலங்கை தொடர்ச்சியான படுதோல்வியை சந்தித்தது.

உலகக் கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டியை முன்னின்று நடத்தும் தென்ஆபிரிக்காவுக்கு எதிராக நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற சி குழு போட்டியில் 32 - 87 என்ற கோல்கள் வித்தியாசத்தில் இலங்கை தோல்வி அடைந்தது.

ஜெமெய்க்காவுக்கு எதிரான போட்டியில் பந்துப் பரிமாற்றங்களில் ஏகப்பட்ட தவறுகளை இழைத்த இலங்கை எதிரணிக்கு 25 இற்கும் மேற்பட்ட கோல் போடும் இரட்டை வாய்ப்புகளைத் தாரைவார்த்து தோல்வி அடைந்தது.

முதல்போட்டியில்போன்றே இந்தப் போட்டியிலும் சகல ஆட்ட நேர பகுதிகளிலும் 10 இற்கும் குறைவான கோல்களையே இலங்கை புகுத்தியது.

இலங்கையின் வலைப்பந்தாட்ட நட்சத்திரம் தர்ஜினி சிவலிங்கம் ஆரம்பப் போட்டியில் சில நிமிடங்கள் மாத்திரமே விளையாடிய நிலையில் இரண்டாவது போட்டியில் விளையாடவே இல்லை.

அவருக்குப் பதிலாக திசலா அல்கம அணியில் இணைக்கப்பட்டார். இலங்கைக்கு எதிரான போட்டியின் முதலாவது ஆட்ட நேர பகுதியில் தென் ஆபிரிக்கா 24 - 9 என்ற கோல்கள் கணக்கில் முன்னிலை அடைந்தது.

தொடர்ந்து இரண்டாவது ஆட்டநேர பகுதியையும் 21 - 9 என்ற கோல்கள் அடிப்படையில் தனதாக்கிக் கொண்ட தென்ஆபிரிக்கா, இடைவேளையின் போது 45 - 18 என்ற கோல்கள் வித்தியாசத்தில் முன்னிலையில் இருந்தது.

மூன்றாவது ஆட்ட நேர பகுதியில் தென்ஆபிரிக்காவின் வேகத்திற்கும் பலத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் அப்பகுதியை 6 - 23 என்ற கோல்கள் கணக்கில் இல்ங்கை பறி கொடுத்தது.

கடைசி ஆட்ட நேர பகுதியிலும் திறமையாக விளையாடிய தென்ஆபிரிக்கா 19 - 8 என்ற கோல்கள் கணக்கில் அப்பகுதியையும் தனதாக்கி 87 - 32 என்ற கோல்கள் அடிப்படையில் அமோக வெற்றியீட்டியது.

இலங்கை சார்பாக திசலா அல்கம 28 முயற்சிகளில் 24 கோல்களையும் செமினி அல்விஸ் 8 முயற்சிகளில் 7 கோல்களையும் உதவி அணித் தலைவி துலங்கி வன்னித்திலக்க 2 முயற்சிகளில் ஒரு கோலையும் போட்டனர். (நி)

# உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளுக்காக சென்னை, பெங்களூர் மைதானங்கள் ஆய்வு

13 ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி ஒக்டோபர் 5 ஆம் திகதி முதல் நவம்பர் 19 ஆம் திகதி வரை இந்தியாவில் நடக்கிறது. இதில் 10 நாடுகள் பங்கேற்கின்றன.

அகமதாபாத், கொல்கத்தா, சென்னை, மும்பை, டெல்லி, ஐதராபாத், பெங்களூர், புனே, லக்னோ, புனே ஆகிய 10 மைதானங்களில் 48 போட்டிகள் நடக்கிறது.

இந்நிலையில் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி நடைபெறும் மைதானங்களில் ஐ.சி.சி (சர்வதேச கிரிக்கெட் கவுன்சில்) குழு ஆய்வு செய்து வருகிறது.

சென்னை சேப்பாக்கம் எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியம், பெங்களூர் சின்னச்சாமி ஸ்டேடியம் ஆகியவற்றை ஆய்வு செய்தது. மைதானங்களை பார்த்து ஐ.சி.சி குழு திருப்தி தெரிவித்தது.

இந்திய அணி மோதும் முதல் ஆட்டம் சென்னையில் நடக்கிறது. ஒக்டோபர் 8 ஆம் திகதி அவுஸ்திரேலியாவுடன் மோதுகிறது.

நியூஸிலாந்து அணி மோதும் 2 ஆட்டமும் பாகிஸ்தான் விளையாடும் 2 போட்டியும் ஆக மொத்தம் 5 ஆட்டங்கள் சேப்பாக்கம் மைதானத்தில் நடக்கிறது.

பெங்களூர் சின்னசாமி ஸ்டேடியத்தில் 5 போட்டிகள் நடக்கிறது.

இந்தியா-நெதர்லாந்து அணிகள் மோதும் ஆட்டம் பெங்களூரில் நவம்பர் 23 ஆம் திகதி நடக்கிறது. இதே போல பயிற்சி ஆட்டம் நடைபெறும் திருவனந்தபுரம் ஆடுகளத்தையும் ஆய்வு செய்தது.

ஐ.சி.சி குழு தற்போது அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி ஸ்டேடியத்தை ஆய்வு செய்து வருகிறது. தொடக்க ஆட்டம், இறுதிப் போட்டி உட்பட 5 போட்டிகள் அகமதாபாத்தில் நடக்கிறது. (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2877

### இந்துஜா




### சதீஸ்




### சாரங்கன்




### கண்ணன்




### ரேவதி




### ரேகா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு உதவுங்கள் சீனாவை அழைத்த இந்தியா



(டில்லி)

இலங்கைக்கான கடன் நிவாரணத் திட்டத்தில் பிரான்ஸ், ஜப்பான் இந்தியாவுடன் சீனாவும் இணைந்து கொள்ள முடியும் என இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

இலங்கை பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்கி வரும் நிலையில் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு திட்டத்தில் ஜப்பான், இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் இணைந்து கொண்டுள்ளன.

இந்த கடன் நிவாரண திட்டத்தில் இலங்கையின் பாரிய கடன் வழங்குநரான சீனாவும் இணைந்து கொள்ள முடியும் என சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கைக்கு வழங்கப்படும் நிவாரணத் திட்டங்களை துரிதப்படுத்துமாறு சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகிய வற்றிடம் அவர் கோரியுள்ளார்.

இலங்கை போன்ற நடுத்தர வருமானம் ஈட்டும் நாடு ஒன்று பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கும் சந்தர்ப்பத்தில் வித்தியாசமான அணுகுமுறைகளின் ஊடாக இந்த பிரச்சினைக்கு தீர்வு காண முனைப்பு காட்ட வேண்டும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன் இலங்கைக்கு உதவி வழங்கும் நோக்கில் நிறுவப்பட்டுள்ள இந்த குழுவானது இந்தியா, பிரான்ஸ், ஜப்பான் என்பன வற்றுக்கு வரையறுக்கப்படவில்லை எனவும் இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகள் இதில் இணைந்து கொண்டு இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு உதவ முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)


NLB NATIONAL LOTTERY

பெரிய பரிசுகள் சிறிய பரிசுகள் இரட்டிப்பாகியுள்ளது

மஹஜன சம்பத
சுப்பர் பரிசுக்கு 2 கோடி
முதல் பரிசு 20 இலட்சமாகிவிட்டது
முதல் 05 இலக்கங்களுக்கு ரூ.ஒரு இலட்சம்
இறுதி 04 இலக்கங்களுக்கு ரூ.15,000
இப்போது முதல் இலக்கத்திற்கும் பரிசு

Mega POWER
சுப்பர் பரிசுக்கு 40 கோடி
முதல் பரிசு 20 இலட்சமாகிவிட்டது
இலட்சம் பரிசு 2 இலட்சமாகிவிட்டது
03 இலக்கங்களுக்கு ரூ.5,000
சுப்பர் இலக்கத்திற்கும் பரிசு

கொவி செத
முதல் பரிசு 20 இலட்சமாகிவிட்டது
இலட்சம் பரிசு ரூ.250,000 ஆகிவிட்டது
ரூ.2,000 இற்கு ரூ.5,000

ஹந்தஹன
முதல் பரிசு 10 இலட்சமாகிவிட்டது

லக்கி 7
வெல்வதற்கு 7 வெற்றி வாய்ப்புகள்
அதிக பரிசுகளை கொண்ட லொத்தர் சீட்டு

தன நிதானய
முதல் பரிசு 20 இலட்சமாகிவிட்டது
இலட்சம் பரிசு ரூ.200,000 ஆகிவிட்டது
விசேட எழுத்திற்கும் மேலதிக பரிசு

கொவி செத, மெகாபவர், தன நிதானய

லொத்தர் சீட்டுகளில் அச்சிடப்பட்டுள்ள Double Chance இலக்கத்தினை பொருத்தி
இப்போது தினசரி மேலதிகமாக ரூ. 100,000/- பணப்பரிசுகள்...
NLB லொத்தர் சீட்டுக்களை கொள்வனவு செய்தால் நீங்கள் என்றும் அதிர்ஷ்டசாலிகள்....

NLB தேசிய லொத்தர்
வாழ்வின் கனவிற்கு - அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்
(சி-2068)


# இராசிபலன்

31.07.2023
ஆடி 15, திங்கட்கிழமை
சதுர்த்தசி பின்னிரவு 3.26 மணிவரை

பூராடம் முன்னிரவு 6.37 மணிவரை
சுபநேரம் -12.03-1.33 மணிவரை
இராகுகாலம்-7.33-9.03 மணிவரை

சந்திராஷ்டமம்- மிருகசீரிடம், திருவாதிரை.

வளவன்

**மேஷம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தொழில் ரீதியாக ஏற்பட்ட மறைமுகப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**ரிஷபம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**மிதுனம்** உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், நட்பு வட்டம் விரிவடையும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**கடகம்** உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.

**சிம்மம்** பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பணத் தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு.

**கன்னி** பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**துலாம்** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**தனுசு** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் எடுக்க வேண்டிய நாள், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள்.

**மகரம்** இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**கும்பம்** பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், திடீர் பண வரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், தித்திக்கும் செய்திகள் வந்து சேரும், காரிய அனுகூலமுண்டு

**மீனம்** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், செய்தொழில் மேன்மையுண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கடவுள்,பெற்றோர், ஆசான் இவர்களுக்கு நாம் ஒருபோதும் கைமாறு செய்து விட முடியாது.

# அராலியில் சட்டவிரோத மண் கடத்தல் இளைஞர்கள் ஒன்று கூடி முற்றுகை


(யாழ்ப்பாணம்)

அராலியில் அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோத மண் கடத்தல் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 5 மணி தொடக்கம் 9.30 மணிவரை அராலி மத்தி முருகன் ஆலயத்திற்கு அருகில் உள்ள மேட்டு நிலப்பரப்பில் மண் அகழ்வு இடம்பெறுவதை அவதானித்த சமூக இளைஞர்கள் கனரக வாகனத்தை மறித்ததுடன் துறைசார் அதிகாரிகளுக்கு அறிவித்ததை அடுத்து கிராம அலுவலர் சம்பவ இடத்திற்கு வருகை தந்து தடுத்து நிறுத்தியதுடன் பொலிஸாருக்கும் தெரியப்படுத்தினர்.

மண் அகழ்வுச் செயற்பாடு எந்தவிதமான அனுமதியும் இன்றி மண் எடுக்கப்பட்டதுடன் குறித்த கனரக வாகனத்தை பொலிஸார் பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர். இவ்மண் அகழ்வுச் செயற்பாட்டில் மூன்றுக்கும் மேற்பட்ட டிப்பர் மற்றும் பெக்கோ இயந்திரம் ஈடுபட்டதுடன் வெளிப் பிரதேசத்திற்கு மண் எடுத்துச் செல்லப்பட்டது.

இதேவேளை இவ் மண் எடுத்துச் செல்வதற்கு பிரதான போக்குவரத்துப்பாதை பயன்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (நி-104)



சைவத்திற்கும் தமிழுக்கும் அளப்பரிய தொண்டாற்றிய மட்டுவில் வடக்கைச் சேர்ந்த அமரர் சைவத்திரு கா.சிவபாலனின் திருவுருவச்சிலை நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் மட்டுவில் பகுதியில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.
(படம் சுபேசன்)

# தாவடி அம்பலவாணர் முருகன் ஆலய திருமஞ்ச திருவிழாவில் தென்னிந்திய நடிகர்கள்





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தாவடி அம்பலவாணர் முருகன் கோவிலின் திருமஞ்ச திருவிழா நேற்று முன்தினம் மாலை மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

ஆலயத்தில் இடம் பெற்ற விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து வசந்த மண்டப பூஜை இடம்பெற்று விநாயக பெருமான் மற்றும் முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராக உள்வீதி வலம் வந்து யாகசாலை பூஜை இடம்பெற்றது.

அதனை தொடர்து புதிதாக நிர்மாணிக்கபட்ட அழகிய திருமஞ்சத்தில் முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராக விநாயகப் பெருமானுடன் வெளிவீதி வலம் வந்து அடியவர்களுக்கு அருள்பாலித்தார்.

இவ்திருமஞ்சத் திருவிழாவில் தென்இந்திய திரைப்பட நடிகரும் தாவடி மண்ணின் மைந்தனுமாகிய ஜெய்ஆகாஷ் மற்றும் தென்இந்திய திரைப்பட நடிகையும் சிறந்த பேச்சாளருமாகிய நடிகை கஸ்தூரியும் கலந்து கொண்டனர். (நி)


## அந்தியேட்டி அழைப்பிதழும் நன்றி நவிலலும்

### அமரர்:கதிரவேலு கமலாவதி



எமது அன்புக்குரிய ஆருயிர் தெய்வமான அமரர்.கதிரவேலு கமலாவதியின் மறைவைக் கேட்டு உடன் வந்து உதவிய உற்றார். உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் இந்நேரம் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ள நாங்கள் நேரில் வர முடியாது போனாலும் தொலைபேசி மூலமும் குறுஞ்செய்தி மூலமும் எமக்கு ஆறுதல் கூறியவர்கட்கும் ஈமைக்கிரியைகள் புரிந்த சிவாச்சாரியர்கட்கும் நன்றி தெரிவித்து எமது தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 01.08.2023 செவ்வாய்க் கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற இருப்பதுடன் மதிய போசனம் 02.08.2023 புதன்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறும். இவ் அழைப்பை ஒவ்வொருவரும் தனி அழைப்பாக ஏற்று மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

நிருவத்தம்பை,
ஊரிக்காடு. வல்வெட்டித்துறை,
தொ.பே: 077 056 2311

இப்படிக்கு பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.

#### விசேட நன்றி அறிவித்தல் (மருத்துவ குழாம்)

"நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி
வாய்பச் செய்ல்"

என்ற வாக்கிற்கிணங்க எமது அன்புத் தெய்வம் அமரர்.கதிரவேலு கமலாவதி அவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையை நாடியபோது அவரை இனிமையான வார்த்தைகளைக் கூறி பராமரித்த வைத்தியர்கள், சத்திரசிகிச்சை நிபுணர்கள், தாதியர்கள் அனைவரையும் இந்த இடத்தில் நினைத்துப் பார்க்கிறோம் ஏன் எனின் எமது தெய்வம் 1955 ஆம் ஆண்டு நோய்வாய்ப்பட்டு இன்று வரை எம்மை பெற்று வளர்த்து எங்களுடன் இருந்திருக்கின்றார் என்றால் முதலாவது எம்மைக் கடந்த சக்தி ஆனால் இது எமது கண்ணுக்குப் புலப்படாதது. ஆனால் எம் கண் முன் வரும் மருத்துவ குழாம் முதலாவது யாழ் போதனா வைத்தியசாலை ஆகும் இந்த வகையில்

12.08.1955 இருந்து 12.10.1955 வரை 21.09.1958 இருந்து 01.10.1958 வரை
07.04.1956 இருந்து 17.04.1956 வரை 09.03.1960 இருந்து 19.03.1960 வரை
13.09.1956 இருந்து 18.09.1956 வரை 08.11.1964 இருந்து 06.12.1964 வரை
28.12.1956 இருந்து 08.01.1957 வரை 01.10.1972 இருந்து 07.10.1972 வரை

எனவே இக் காலப் பகுதியில் கடமை புரிந்த பொது வைத்திய நிபுணர்கள் சத்திரசிகிச்சை நிபுணர்கள். தாதிமார்கள் அனைவரையும் எமது இதயத்தில் இருத்தி நன்றி தெரிவிக்கின்றோம். 1956ம் ஆண்டு எமது தாயாருக்கு ஒரு சிறுநீர்ப்பை அகற்றப்பட்ட போது அதில் கடமை புரிந்த அனைத்து சுகாதார ஊழியர்களுக்கும் நன்றி உரித்தே

இதே போல் பருத்தித்துறை புலோலி வைத்தியசாலை, தெல்லிப்பழை வைத்தியசாலை. இறுதிக் காலப்பகுதியில் திருநெல்வேலி நொதேன் சென்ரல் வைத்தியசாலை ஆகியவற்றில் எமது உளநிலைகளைப் புரிந்து எமது தெய்வத்திற்கு சேவை புரிந்த பொது வைத்திய நிபுணர் திருமதி நளாயினி ஜெகதீஸ்வரன் அவர்களையும் அவர்களுடன் இணைந்து பணியாற்றிய அனைவரையும் நினைவிலும் மனதிலும் இருத்தி நன்றி தெரிவிப்பதிலாவது குறைந்தபட்சம் மனநிறைவடைகின்றோம்.

"என்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை. செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்ற வள்ளுவர் வார்த்தைகளை சிரசில் கொண்டு அனைவருக்கும் நன்றி கூறி நிற்கின்றோம்.

நன்றி. (6981)


## சந்தைகளில் நேற்றைய விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 200 | 240 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 210 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 500 | 400 |
| தக்காளி | 400 | 320 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 250 | 200 | 300 |
| கோவா | 250 | 230 | 280 | 300 |
| கரட் | 400 | 520 | 520 | 600 |
| பூசணி | 140 | 140 | 100 | 150 |
| புடோல் | 120 | 160 | 120 | 200 |
| வாழைக்காய் | 160 | 150 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 400 | 350 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 | 130 | 150 |
| பாகற்காய் | 350 | 350 | 400 | 400 |
| வெண்டக்காய் | 200 | 150 | 120 | 320 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 180 | 200 |
| பயற்றங்காய் | 200 | 300 | 150 | 200 |
| லீக்ஸ் | 250 | 300 | 250 | 300 |
| பீற்றூட் | 200 | 250 | 220 | 300 |
| கறிமிளகாய் | 350 | 300 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 350 | 400 |
| போஞ்சி | 450 | 450 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 150 | 240 | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 80 | 100 |
| தேசிக்காய் | 200 | 300 | 100 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 350 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 150 | 200 | 200 | 320 |
| முள்ளங்கி | 120 | 100 | 130 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 50 | 180 | 40 | 60 |
| ஈரப்பலா | 180 | 160 | 100 | 100 |

## 'லயத்துக் கோழிகள்' நாடக ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

மலையக நாடகச் செயற் பாட்டாளர் இ.லோகானந்தனின் நெறியாள்கையில் உருவாகி, இன்னும் பல இளம் அரங்க ஆளுமைகளின் பங்கு பற்றலுடன், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்ற லயத்துக் கோழிகள் நெடு நாடகம் யாழ் ப்பா, ணத்தில் காலையடி, பண் டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்ற த்தில் இன்று திங்கட் கிழமை மாலை 6 மணியளவில் ஆற்றுகை செய்யப்பட வுள்ளது.

செம்முகம் ஆற்றுகைக் குழு மற்றும் மறுமலர்ச்சி மன்றம் ஆகிய அமைப்புகளின் ஒழு ங்கமைப்பில் முற்றிலும் இலவசமாக இடம்பெறும் இவ் வர லாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாடக ஆற்றுகையைக் கண்டு களிக்க அனைவரையும் ஏற்பாட்டாளர்கள் அழைத்து நிற்கின்றனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூலை மாத வெற்றியின் உண்மைக் கதை

இரு விசேட சீட்டிழுப்புகளினால் மாத்திரம் பொதுவான சீட்டிழுப்புக்கு மேலதிகமாக வழங்கும் பெரும் பரிசுமழை!

## சுமார் ஏழு கோடி ரூபா பெறுமதியான பணத்தை

(ரூ.69,351,040/-)

**794,838** வெற்றியாளர்களுக்கிடையே பகிரப்பட்டுள்ளது.



மஹஜன சம்பத MAHAJANA SAMPATHA

2023.07.28 ஆம் திகதி நடைபெற்ற மஹஜன சம்பத ஜயKing 5189 ஆவது சீட்டிழுப்பில்....

### 25 இலட்சம் பெறுமதியான 2 வெற்றிகள்

வெற்றிபெற்ற டிக்கட் விற்பனை செய்த மாவட்டங்கள் மற்றும் முகவர்கள் - திரு/திருமதி

**கம்பளைக்கு**
விற்பனை முகவர் - சம்சன் முனிதுங்க

**811 குறுந்தகவல் சேவை**

### மோட்டார் சைக்கிள்களை வென்ற 2 வெற்றியாளர்கள்

வெற்றிபெற்ற டிக்கட் விற்பனை செய்த மாவட்டங்கள் மற்றும் முகவர்கள் - திரு/திருமதி



கண்டிக்கு விற்பனை முகவர் - ஜீ.ஜீ.அல்விஸ்
அம்பாரைக்கு விற்பனை முகவர் - எஸ். மதன்

### iPhone வென்ற 1 வெற்றியாளர்

வெற்றிபெற்ற டிக்கட் விற்பனை செய்த மாவட்டம் மற்றும் முகவர்கள் - திரு/திருமதி



களுத்துறைக்கு விற்பனை முகவர் - சந்திரா விதானகே

### தங்க நாணயங்களை வென்ற 7 வெற்றியாளர்கள்

வெற்றிபெற்ற டிக்கட் விற்பனை செய்த மாவட்டங்கள் மற்றும் முகவர்கள் - திரு/திருமதி



மாத்தறைக்கு விற்பனை முகவர் - கே.ஜீ. ஷாந்த
அனுராதபுரத்துக்கு விற்பனை முகவர் - கே.சந்திரலதா
அம்பாறைக்கு விற்பனை முகவர் - எஸ். மதன்
கொழும்புக்கு விற்பனை முகவர் - ஈ.கே. பிரேமசிறி
குருணாகலைக்கு விற்பனை முகவர் - சந்தன குமார
குருணாகலைக்கு விற்பனை முகவர் - எம். டீ.ஜ. வர்ணகுலசூரிய
மாத்தறைக்கு விற்பனை முகவர் - கே.ஜீ.ஷாந்த

லக்கி 7 முதல் சீட்டிழுப்பு 2023.07.14 ஆம் திகதி நடைபெற்றது



வெற்றியை நாட்டிற்கு பகிர்ந்தளித்த பெருமைமிகு விற்பனை முகவர்கள் இதோ..

சுப்பர் மோட்டார் கார்க்கான இலக்கம் 0410868 பொருந்துவதன் மூலம் வெற்றி லொத்தர்ரினை விற்பனை செய்தவர்
வெல்லவாய விற்பனை முகவர் திரு W.M.சிரியானந்த

### ஒரு மில்லியன் வெற்றியாளர்

சுன்னாகம் விற்பனை முகவர் திரு N.வசீகரன்

| இரண்டு இலட்சம் அதிரஷ்டசாலிகளின் வெற்றி இலக்கம் மற்றும் விற்பனை முகவர்கள் | | | | தங்கப்பவுண் வெற்றியாளர்கள் 2 வெற்றி இலக்கங்கள் மற்றும் விற்பனை முகவர்கள் | |
|---|---|---|---|---|---|
| 0179005 | 0975259 | 0976882 | 0607010 | 0970200 | 0111016 |
| திருV. L. D.பத்திரன கிளைவத்தை | திரு S.கனகலிங்கம் யாழ்ப்பாணம் | | திரு நிமல் பெரேரா ஆமர் வீதி | திரு S. கனகலிங்கம் யாழ்ப்பாணம் | திரு K.பூபாலசிங்கம் பருத்தித்துறை |

### லக்ஷபதி இலக்கம் 26116
### இலட்சாதிபதிகள் 52

யாழ்ப்பாண மாவட்டம்

காலி மாவட்டம்

கம்பஹா மாவட்டம்

கொழும்பு மாவட்டம்

களுத்துறை மாவட்டம்

NLB நடமாடும் பிரச்சார வண்டி விற்பனை

குருநாகல் மாவட்டம்

கண்டி மாவட்டம்

மட்டக்களப்பு மாவட்டம்

பதுளை மாவட்டம்

மாத்தறை மாவட்டம்

பொலன்னறுவை மாவட்டம்

மாத்தளை மாவட்டம்

மொனராகலை மாவட்டம்

அம்பாந்தோட்டை மாவட்டம்

நுவரெலியா மாவட்டம்

புத்தளம் மாவட்டம்

இரத்தினபுரி மாவட்டம்

அநுராதபுர மாவட்டம்

அம்பாறை மாவட்டம்

திருகோணமலை மாவட்டம்

### ஒரு இலட்சம் பெறுமதியான 85 வெற்றியாளர்கள்

வெற்றிபெற்ற டிக்கட் விற்பனை செய்த மாவட்டங்கள் மற்றும் முகவர்கள் - திரு/திருமதி

சீ.டப்ளியூ.சீ. மொஹொட்டி - வலஸ்முல்ல
டப்ளியூ.எஸ். கல்யானதாச - அம்பலான்கொடை
பீ.எஸ். கேமத்துமஆராச்சி - சூரியவெவ
எச்.ஜீ.யூ.புஷ்பகுமார - வலஸ்முல்ல

அஜித் ருவன் - தியபெதும
இந்திராணி சுவர்ணலதா - கதுருவெல

பீ.அமர ராஜகருணா - சிலாபம்
நயன ஶ்ரீலால் - கல்பிட்டி
எச். குணதாச - சிலாபம்
எம். எம். பீ. வெரான் - மஹவெவ

ஏ. ஜயவர்த்தன - புலத்கொஹுபிட்டிய
டப்ளியூ.ஏ.எம்.எஸ். விக்ரமாரச்சி - கோல்கஸ் சந்தி

பீ.பிரதீபன் - மட்டக்களப்பு

ஏ.சீ. சன்ஜீவ - அக்மீமன
சிறில் மெண்டிஸ் - பலபிட்டிய
பீ.டப்ளியூ.சிரியலதா - யக்கலமுல்ல

எம். ஏ. டப்ளியூ. மல்லவஆராச்சி - நிகொழும்பு
எச்.டீ.எஸ். பரண்டன் பர்னாந்து - பொபிட்டிய
ஐ.எஸ். ஐவிஜேரத்ன - கம்பஹ
லலித் சஜீவ - என்டேரமுல்ல
ஏ.எம்.ஏ. விஸ்னா ஒசமாலி - வல்கம
பீ.ஏ.நந்தசிறி - வேயங்கொட

ரங்கன ஆரியதாச - நாரம்மல
டப்ளியூ.ஏ.சீ. வீரசூரிய - அலவ்வ
சந்தன குமார - குருணாகலை
ஆர். எம். சிரிபால - ஹெட்டிபொல

சுலோஜனா ஜயலத் - கலேவலை
ஆர். எம். வசந்த - நாஉல
எரங்கி அனுபமா - பலாபத்வல

எல். பிரேமதாச - மஹரகம ( பமுனுவ)
எச். எல்.எஸ். ஜக்மாலி - மஹரகம
ஜீ.எச். சமன் - மாளிகாவத்தை
ஏ.ஐ.கே. ராமநாயக்க - கொட்டஹேன
எம்.எம். முனிதாச - கொட்டாவ
சிறி ராஜபக்ஷ - மஹரகம
தேஜானி இலங்ககே - கொம்பனித் தெரு
கே.ஏ.ஜீ.எஸ். அல்விஸ் - தொட்டலங்க
கிரிஷாந்த பர்னாண்டோ - மொரட்டுவ
மகேஷ் ரத்னாயக்க - இராஜகிரிய
எம். எம். முனிதாச - கொட்டாவ
எச். பிரேமசிறி - கொழும்பு
திலீகா நில்ருக்ஷி - கொழும்பு
கே.எல்.நிஷாந்த - மாலபே
டீ.பீ.எஸ். ஹேவகே - அவிஸ்ஸாவலை

ஏ.சீ.அலி.'பவ்லா - கிண்ணியா

கே.ஜீ.விக்ரமசிங்க - அனுராதபுரம்
உபாலி லக்ஷ்மன் - தலாவ
டீ.டப்ளியூ. பெரேரா - பண்டாரவளை
கே.ஜீ. விக்ரமசிங்க - அனுராதபுரம்
அனுருத்திகா பிரேமரத்ன - மதவாச்சி

கீர்த்தி புஷ்பகுமார - பொரம்ப
துஷார பெரேரா - திஹகொட

குசும்சிறி பத்திரண - பதுவத்த
புஷ்பமாலா அமரசேகர - இரத்தினபுரி

ஜீ.கே. ரூபசிங்ஹ - நுவரெலியா
பாலித சஞ்ஜீவ - தலவாக்கலை

புத்திக ரத்னாயக்க - புத்தள
கே.டப்ளியூ.ஜீ.ரணசிங்க - மதகம
கே.டப்ளியூ.ஜீ. ரணசிங்க - மதகம
சம்பத் சேனாதீர - மொனராகலை

டீ.டப்ளியூ.பெரேரா - பண்டாரவளை

ஓஸ்மன் டி சில்வா - கண்டி
பீ.எஸ். ஜயவர்த்தன - கண்டி
கனில் ரணவீர - பிலிமதலாவ
பீ.எஸ். ஜயவர்த்தன - கண்டி
கபில அமரசேகர - வத்தேகம

வை.யோன்தியன் - மன்னார்

எஸ்.ஜீ.எட்வட் - புதுக்குடியிருப்பு

அசங்க பர்னாண்டோ - ஹிரண
பிரியமந்த சில்வா - அங்குருவாதொட்ட
ஆர்.ஏ.இந்திராணி - ஹொரண
சுயான் மதுஸான் - மொரகஹஹேன

ஆர். சுதர்ஷன் - மன்டுமாய்
எஸ். கனகலிங்கம் - யாழ்ப்பாணம்
எஸ். கனகலிங்கம் - யாழ்ப்பாணம்
ம. வசீகரன் - நெல்லியடி
எஸ். கனகலிங்கம் - யாழ்ப்பாணம்
ஜே. ஆரணி - காங்கேசந்துறை
எஸ். கிருஷன் - அச்சுவேலி
ஆர். பிரஷாந்தன் - யாழ்ப்பாணம்

எஸ். மதன் - கல்முனை
எஸ். மதன் - கல்முனை
டப்ளியூ.எம்.ஜீ.சீ.விரகோன் - தெஹியத்தகண்டிய
எஸ். மதன் - கல்முனை
எஸ். மதன் - கல்முனை

(C-2070, C-2071, C-2072, C-2073)

NLB | தேசிய லொத்தர் சபை
வாழ்வின் கனவிற்கு - அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ரஷ்யாவில் உக்ரைன் ட்ரோன் தாக்குதல் மொஸ்கோ விமான நிலையம் மூடப்பட்டது

(மொஸ்கோ)
ரஷ்ய தலைநகர் மொஸ்கோ மீது உக்ரைன் நேற்று அதிகாலையில் ஆளில்லா விமானம் மூலம் தாக்குதல் நடத்தியது. இதில் இரண்டு கட்டடங்கள் சேதமடைந்துள்ளன. இது தொடர்பான புகைப்படங்கள், வீடியோக்கள் வெளியாகி உள்ளன. இந்த தாக்குதலில் காவலாளி ஒருவர் காயமடைந்ததாக தகவல் வெளியாகி உள்ளது.

நேற்று அதிகாலை உக்ரைன் தரப்பில் இருந்து 3 ட்ரோன்கள் தாக்குதல் நடத்தி உள்ளன. இதில் ஒரு ட்ரோன் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. எஞ்சிய 2 ட்ரோன்களும் மின்னணு ஆயுதங்கள் மூலம் தடுக்கப்பட்டது. அந்த ட்ரோன்கள் மொஸ்கோவில் உள்ள சர்வதேச வர்த்தக மைய கட்டடம் மீது மோதி வெடித்தது. இதில் கட்டடத்தின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளது.

இந்த தாக்குதலைத் தொடர்ந்து பாதுகாப்பு காரணங்களுக்காக ஒரு விமான நிலையம் மூடப்பட்டது. மொஸ்கோ தெற்குப் புறநகரில் உள்ள வனுகோவா விமான நிலையத்திற்கு சுமார் ஒரு மணி நேரத்துக்கு எந்த விமானங்களும் வரவில்லை. எந்த விமானமும் அங்கிருந்து புறப்பட்டுச் செல்லவில்லை. மேலும் மொஸ்கோ மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளிலும் வான்வெளி தற்காலிகமாக மூடப்பட்டன. (நி)

## யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்துவது கடினம்

### ரஷ்ய ஜனாதிபதி தெரிவிப்பு

(மொஸ்கோ)
உக்ரைனில் நிரந்தர சமாதானத்தை தோற்றுவிக்கும் நோக்கிலான செயற்பாடுகளை தான் நிராகரிக்கவில்லை என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கர்ளுடன் சென். பீற்றர்ஸ் பேக்கில் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் அவர் இந்த கருத்தினை வெளியிட்டார்.

உக்ரைனில் சமாதானத்தை ஏற்படுத்தும் வகையில் ஆபிரிக்க மற்றும் சீன தலைவர்களால் முன்வைக்கப்பட்ட யோசனைகளை அடிப்படையாக வைத்து சமாதான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் இராணுவம் தாக்குதல் நடவடிக்கைகளை தொடரும் நிலையில், யுத்த நிறுத்தம் ஒன்றினை அமுல்படுத்துவது கடுமையான விடயம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



சில முன் நிபந்தனைகளை கடைப்பிடிக்காமல் பேச்சுவார்த்தை மேடைக்கு வரப்போவதில்லை என உக்ரைனும் ரஷ்யாவும் முன்பு தெரிவித்திருந்தன.

கடந்த 1991 ஆம் ஆண்டில் இருந்தது போன்று தமது எல்லைக்கோடு அமைய வேண்டும் என உக்ரைன் வலியுறுத்தி வரும் நிலையில் ரஷ்யா அதற்கு எதிர்ப்பினை வெளியிட்டு வருகின்றது.

அதேவேளை, நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, உக்ரைனுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை மேலும் அதிகரிக்கும் எண்ணம் ரஷ்யாவிற்கு இல்லை என ஜனாதிபதி விளாடிமிர் புடின் குறிப்பிட்டார்.

எனினும், சர்வதேச கோட்பாடுகளை மீறுவதாக ரஷ்யாவும் உக்ரைனும் பரஸ்பர குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## சீனாவை புரட்டிப் போட்ட 'டொக்சூரி' சூறாவளி

### 7 லட்சம் பேர் பாதிப்பு



(பீஜிங்)
பசுபிக் பெருங்கடலில் டொக்சூரி என்று பெயரிடப்பட்ட புயல் உருவானது. சூப்பர் சூறாவளி புயலாக வலுவடைந்து தென் கிழக்கு சீனாவை நோக்கி நகர்ந்தது. இதில் புஜியான் மற்றும் குவாங்ஷோ மாகாணங்களை சூறாவளி புயல் தாக்கியது.

சுமார் 175 கி.மீற்றர் வேகத்தில் காற்று வீசியது. அதனால் மரங்கள், மின் கம்பங்கள் சரிந்து விழுந்தன. பலத்த மழையால் பல இடங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

புஜியான், குவாங்ஷோ மாகாணத்தைச் சேர்ந்த சுமார் 7 லட்சம் பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டனர். மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் சுமார் 10 லட்சம் பேர் அவதியடைந்துள்ளனர். புயல் வலுவிழந்ததை அடுத்து மீட்புப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் டொக்சூரி புயல் காரணமாக தலைநகர் பீஜிங் மற்றும் அதைச் சுற்றியுள்ள மாகாணங்களில் சிவப்பு எச்சரிக்கையை அந்நாட்டின் வானிலை மையம் விடுத்துள்ளது.

சீனா, பிலிப்பைன்ஸ், தாய்வான் ஆகிய நாடுகளை புரட்டிப் போட்டுள்ளது டொக்சூரி. புயலில் சிக்கி 39 பேர் பலியாகி உள்ளனர். (நி)

### இந்தியாவை அடுத்து

## அரிசி ஏற்றுமதியை தடை செய்த மத்திய கிழக்கு நாடு

பாசுமதி அல்லாத வெள்ளை அரிசி ஏற்றுமதிக்கு இந்தியா திடீரென்று தடை விதித்துள்ள நிலையில், ஐக்கிய அரபு அமீரகமும் அரிசி ஏற்றுமதி மற்றும் மறுஏற்றுமதியை நான்கு மாதங்களுக்கு தடை செய்துள்ளது.

குறித்த தடை விதிப்பில் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசி வகைகளும் பொருந்தும் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இந்த தடையானது புழுப்பு அரிசி, முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அரைக்கப்பட்ட அரிசி மற்றும் உடைந்த அரிசி உட்பட அனைத்து வகையான அரிசிகளுக்கும் பொருந்தும் எனவும் ஐக்கிய அரபு அமீரகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் அரிசியை ஏற்றுமதி செய்ய அல்லது மறு ஏற்றுமதி செய்ய விரும்பும் நிறுவனங்கள், நாட்டிற்கு வெளியே ஏற்றுமதி அனுமதி பெற பொருளாதார அமைச்சகத்திடம் கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

இருப்பினும் கடுமையான விலை உயர்வுக்கு மத்தியில் பாஸ்மதி அல்லாத வெள்ளை மற்றும் உடைந்த அரிசியின் ஏற்றுமதியை தடை செய்வதற்கு இந்திய அரசாங்கம் கடந்த வாரம் எடுத்த முடிவைத் தொடர்ந்து ஐக்கிய அமீரக நிர்வாகம் இந்த முடிவை எடுத்துள்ளது.

மேலும், இந்தத் தடை உத்தரவானது தற்காலிகமாக இருந்தாலும் ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள உள்ளூர் விநியோகஸ்தர்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகளில் அரிசி விலை உயரும் என்று எதிர்பார்க்கின்றனர்.

குறிப்பாக உலக அரிசி ஏற்றுமதியில் 40 சதவீதத்திற்கும் அதிகமான பங்கை இந்தியா கொண்டுள்ளது. மட்டுமின்றி, எண்ணெய் நீக்கப்பட்ட அரிசி தவிடு ஏற்றுமதியை நவம்பர் 30 வரை கட்டுப்படுத்தவும் இந்திய அரசு முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (நி)

## தாய்வான் ...
## பெருமளவு ...
### அச்ச...

(வோஷிங்டன்)
சீனாவிலிருந்து வர... கொள்ளவும் தற்காப்புத் ... தாய்வானுக்கு அமெரி... உதவியை வழாங்கவுள்ள...

## பட்டாசுக் கிடங்கில் ...
## 9 பேர் பலி-100 பே...
### தாய்லாந்தில் துயரச்...



(தாய்லாந்து)
தாய்லாந்தில் தெற்கு மாகாணமான நாராதிவாட்டில் உள்ள சுங்கை கோலோக் நகரில் அமைந்துள்ள பட்டாசுக் கிடங்கில் நேற்று முன்தினம் பயங்கர வெடி விபத்து ...

ஏ... க... பி... கி...

உ... கு... ந்... தெ...

## கொரோ...
## மூளை...

(லண்ட...
கொரோ... னால் பாதி... க்கு இரண... க்குப் பிறகு... பாட்டில் பா... என அதிர்ச்... யாகியுள்ள...
சமீபத்தி... இந்த விட... ப்பட்டுள்ள...
லண்ட... கிங்ஸ் கல்... மாண வர்... வில், கொ... நீண்ட... செயற்பாடு... ஏற்படுத்து...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ன் கடற்பரப்பில் தொடரும் அமைதியின்மை;
# வு இராணுவ உதவியை வழங்கிய அமெரிக்கா

## ச்சத்தில் சீனா

து வரக்கூடிய தாக்குதல்களை எதிர்
காப்புத் திறனை மேம்படுத்திக் கொள்ளவும்
அமெரிக்கா பெருமளவான இராணுவ
பகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இதனில், உளவுத்துறை, கண்காணிப்பு மற்றும் உளவு கருவிகளும் சிறிய ஆயுத வெடிமருந்துகளும் உள்ளடங்கும்.

இதன் மூலமாக, தற்காலத்திலும் எதிர்காலத்திலும் தன் நாட்டிற்கெதிரான இராணுவ நடவடிக்கைகளை தாய்வான் தடுக்க முடியும் என அமெரிக்க இராணுவ அமைச்சகமான பென்டகன் தெரிவித்துள்ளது.மேலும் தாய்வானை தனது தேசத்தின் ஓர் பகுதியாக சீனா அறிவித்து வருகின்ற நிலையில் அதற்கு தாய்வான் தொடர்ந்து மறுப்புத் தெரிவித்து வருகின்றது.

இதனால், சீனா தேவையேற்படின் தாய்வானை இராணுவ ஆக்கிரமிப்பு மூலமாக கைப்பற்ற போவதாக கூறி வருகின்றது.

அமெரிக்காவின் இவ்வுதவி தாய்வானுக்கு மிகப் பெரிய வலுச் சேர்ப்பதோடு, மறுபுறம் சீனா விற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

இதேவேளை அமெரிக்காவின் இவ்வுதவிக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக, தாய்வான் கடற்பரப்பில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை நிலைநிறுத்துவதற்காக அமெரிக்காவுடன் பாதுகாப்பு விடயங்களில் தொடர்ந்து ஒத்துழைப்பினை நல்கும் என தெரிவித்துள்ளது. (நி)

## கில் பயங்கர வெடி
## 0 பேர் படுகாயம்
### துயரச் சம்பவம்




ன ள ந் று து

ஏற்பட்டது. அங்குள்ள கட்டடத்தின் கட்டுமான பணியின்போது வெல்டிங் செய்ததால் ஏற்பட்ட பிழை காரணமாக பட்டாசு கிடங்கில் வெடி விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த வெடி விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர். மற்றும் 100இறகும் மேற்பட்டோர் படுகாயமடைந்ததாக மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (நி)

### அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும்
# ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க
## ரஷ்யா மற்றும் பெலாரஸிற்கு தடை விதிப்பு



(பாரிஸ்)

எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு இடம்பெறவிருக்கும் பாரிஸ் ஒலிம்பிக்கில் பங்கேற்க உள்ள நாடுகள் பட்டியலில் ரஷ்யாவும் பெலாரஸூம் நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க அழைக்கப்பட்ட 203 நாடுகளின் பட்டியலில் ரஷ்யாவும் பெலாரஸூம் இல்லை என்று சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி அறிவித்தது.இந்த நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் நடுநிலையாளர்களாக ஒலிம்பிக்கில் பங்கேற்க அனுமதி பெறலாம். எனினும் இது குறித்து பின்னர் முடிவு எடுக்கப்படும் என ஐஓசி தெரிவித்துள்ளது.

அமைதியான போட்டியில் உலகம் முழுவதையும் ஒன்றிணைப்பதே ஒலிம்பிக் போட்டிகளின் நோக்கம் என்று ஐஓசி தலைவர் தாமஸ் பாக் தெரிவித்தார்.

உலகில் மோதல்கள், பிளவுகள் மற்றும் போர்கள் அதிகரித்து வரும் நிலையில் இந்த ஒன்றிணைக்கும் சக்தி முன் எப்போதையும் விட அதிகமாக தேவைப்படுகிறது என்றும் அவர் கூறினார். உக்ரைன் படையெடுப்பிற்குப் பிறகு, ரஷ்யா மற்றும் பெலாரஸ் விளையாட்டு வீரர்கள் பல சர்வதேச விளையாட்டு நிகழ்வுகளில் இருந்து தடை செய்யப்பட்டனர்.

இந்நிலையில், இந்த ஆண்டு சில கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. 2022 தடைக்குப் பிறகு இந்த ஆண்டு விம்பிள்டன் போட்டியில் பங்கேற்க ரஷ்ய மற்றும் பெலாரஸ் வீரர்கள் அனுமதிக்கப்பட்டனர்.பாரிஸ் ஒலிம்பிக் 2024 ஜூலை 26 அன்று தொடங்கி ஓகஸ்ட் 11 வரை நடைபெறும். பாலின சமத்துவம் கொண்ட முதல் ஒலிம்பிக் பேர்ட்டி இதுவாகும். ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே எண்ணிக்கையிலான இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக ஐஓசி தெரிவித்துள்ளது. (நி)

# கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு
# மூளை செயற்பாட்டில் பாதிப்பு இருக்கும்

## ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

(லண்டன்)

கொரோனாத் தொற்றி னால் பாதிக்கப்பட்டவர்களு க்கு இரண்டு ஆண்டுகளு க்குப் பிறகும் மூளை செயற் பாட்டில் பாதிப்பு இருக்கும் ன அதிர்ச்சித் தகவல் வெளி யாகியுள்ளது.

சமீபத்திய ஆய்வு ஒன்றில் இந்த விடயம் கண்டுபிடிக்க பட்டுள்ளது.

லண்டனில் உள்ள கிங்ஸ் கல்லூரி ஆராய்ச்சி மாண வர்கள் நடத்திய ஆய் வில், கொரோனா தொற்று நீண்ட கால மூளை செயற்பாடு பாதிப் புகளை ற்படுத்தும் எனத் தெரிய வந்துள்ளது.

மேலும் “கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்க ளிடம் காலப்போக்கில் அவர்களின் மூளை செயற்றிறன் எவ்வாறு மாறியது என்பதை தெரிந்து கொள்ள ஆய்வு செய்யப்பட்டது.

இதில் கொரோனா நோய்த் தொற்றுக்குப் பிறகு சில நபர்களிடம் மேற்கொண்ட ஆய்வில் அவர்களின் மூளை செயற்பாடுகள் மோசமான நிலையில் இருப்பது கண்டறியப்பட்டது.

பணிகளில் கவனம் செலுத்துவது, நினைவு கூறும் திறன் அல்லது பேசும் போது சரியான சொற்களைத் தேர்ந்தெடுத்து பேசுவது போன்ற அறிவார்ந்த செயற்பாடுகள், கொரோனா தொற்றுக்குப் பிறகு சிரமமாக இருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் அதிகமான வேலைப்பளு, மன அழுத்தம், தூக்கமின்மை, அதிக நேரம் கணினி பயன்படுத்துதல் போன்றதால் ஏற்படும் கவனக்குறைவு, குழப்பம், மறதி மனத் தெளிவின்மை ஆகியவை கொரோனாவால் பாதிக்கப்பட்டு நீண்டகாலம் ஆனவர்களிடமும் பொதுவாகக் காணப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# வாக்னர் கூலிப்படையால் அச்சம்
## எல்லைகளை மூடும் ஐரோப்பிய நாடுகள்

(போலந்து)

ரஷ்யாவின் வாக்னர் கூலிப்படை காரணமாக பெலாரஸ் நாட்டுடனான எல்லைகளை மூடும் முடிவுக்கு வந்துள்ளதாக போலந்து மற்றும் லிதுவேனியா நாடுகள் அறிவித்துள்ளன.

குறித்த தகவலை லிதுவேனியா துணை உள்விவகார அமைச்சர் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளார். அவர் குறிப்பிடுகையில், பெலாரஸ் நாட்டுடனான எல்லைகளை மூடும் முடிவுக்கு வந்துள்ளது உண்மைதான். எல்லையை மூடும் வாய்ப்பு அதிகரித்துள்ளது என்றார்.

மேலும் ரஷ்யாவில் ஜூன் மாதம் ஆயுதக் கிளர்ச்சி ஒன்றை ஏற்படுத்த முயன்று தோல்வியை எதிர்கொண்ட நிலையில், வாக்னர் கூலிப்படை தற்போது பெலாரஸ் நாட்டில், தஞ்சமடைந்துள்ளது.இந்த நிலையிலேயே வாக்னர் கூலிப்படை காரணமாக எல்லையை மூடும் முடிவுக்கு போலந்து மற்றும் லிதுவேனியா இரு நாடுகளும் எட்டியுள்ளன.

அதுமட்டுமின்றி, புலம்பெயர் மக்களின் போர்வையில் வாக்னர் கூலிப்படையினர் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குள் நுழையும் வாய்ப்புகள் இருப்பதாக லிதுவேனிய நிர்வாகம் மேற்கத்தேய நாடுகளை தொடர்ந்து எச்சரித்தும் வந்துள்ளது.

போலந்து மற்றும் லிதுவேனியா ஆகிய இரண்டு நாடுகளும் பெலாரஸ் மற்றும் ரஷ்யாவுடனான தங்கள் எல்லைகளில் வேலிகளை அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை


# வெங்காயத்தின் மருத்துவப் பயன்கள்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

ஒரு அடி உயரும் வளரும் தரையுயர் தண்டுடைய குறுஞ் செடியாகும். பல பருவச் செடி. உண்மையான தண்டு செதில் இலைகள் மூடப்பட்டு குமிழ் தண்டாகக் காணப்படுகிறது. தோலுருவான இலைகள் நில மட்டத்திலிருந்து உருவாகும்.

2 நிரைகளில் இலைகள் அடுக்கப்பட்டிருக்கும். நிறையப் பூக்கள் காணப்படும். பூக்காம்பு 4-5 மடங்கு பூக்களை விட நீள மானது. பூக்கள் வெள்ளை நிற மானவை. குமிழ் வட்ட வடிமா னது. வெங்காயத்தின் இலை கள் அடர் பச்சை நிறத்திலும் மணமுள்ளதாகவும் இருக்கும்.



வெங்காயத்தில் சிறிய வெங் காயம், பெரிய வெங்காயம் அல்லது பெல்லாரி வெங்காயம் என்று இரு வகைகள் உண்டு. பெரிய வெங்காயத்தை விட சிறிய வெங்காயத்திற்கே அதிக மருத்துவப் பண்புகள் உண்டு என்று சொல்லப்படுகிறது.

சின்ன வெங்காயத்தை நெய்யில் வதக்கி உண்ண மூல நோய் குணமடையும். அல்லது ஐந்து சிறிய வெங் காயத்தை பொடியாக நறுக்கி கொண்டு ஒரு பிடி பாசிப்பருப் புடன் சேர்த்து வேக வைத்து கூட்டாக்கி உப்பு, நெய் சேர்த்து சாதத்தில் பிசைந்து சாப்பிட லாம். இதனால் மூலநோய் குணமாகும்.

நகச்சுற்றுக்கு பழைய சோற் றில் ஒரு வெங்காயத்தையும் ஒரு துண்டு பச்சை மஞ்சளை யும் நசுக்கி சேர்த்து துணியில் நகத்தை சுற்றி தொடர்ந்து 3 நாட்கள் கட்டி வர நகச்சுற்று குணமாகும். கட்டிகள் சரும த்தில் தோன்றினால் வெங்காய த்தை சுட்டு அத்துடன் மஞ்ச ளும் நெய்யும் சேர்த்து பிசைந்து சுட வைத்துக் கட்டினால் கட் டிகள் பழுத்து விரைவில் உடை ந்து விடும். பொதுவான இரும லுக்கு 30 மில்லி வெங்காய சாற்றை 200 மில்லி மோருடன் கலந்து குடிக்கவும் இருமல் குணப்படும்.

மூட்டுக்களில் ஏற்படும் வாத வலிக்கு வெங்காயம், கோரைக் கிழங்கு, சுக்கு, வெட்டிவேர், பற்படாகம் சம எடை எடுத்து சேர்த்து முட்டுக்களில் ஏற்படும் வாத வலிக்கு வெங்காயம், கோரைக்கிழங்கு, சுக்கு, வெட்டி வேர், பற்படாகம் சம எடை எடு த்து சேர்த்து இடித்து 8 பங்கு நீர் சேர்த்து 1/8 ஆக வற்றக்காய்ச்சி, பின் 30 மில்லி அளவு காலை, மாலை குடிக்க வாத நோய்கள் தீரும்.



நீரிழிவு நோயாளிகள் 500 கிராம்அளவுபச்சை வெங்காயத்தை சேகரித்து, தோல் உரித்து அகற்றி சிறுசிறு துண்டுகளாக அரிந்து சுத்தமாக எள்ளுப் பிண் ணாக்கு 200 கிராமை நன்றாக இடித்து தூளாக்கி அரித்து ஒரு புதிய மண் சட்டியில் லீற்றர் அளவிற்கு மோரை விட்டு அம் மண்சட்டியின் வாயை சுத்தமா னதும் மெல்லியதுமான துணி யால் மூடிக் கட்டி விட வேண்டும். அந்தத் துணியின் மீது அரிந்த வெங்காயத்தையும் புண்ணா க்குத் தூளையும் கொட்டி அடு ப்பிலேற்ற வேண்டும். மோர் கொதிக்கும்' ஆவியில் வெங்கா யத்தையும் புண்ணாக்கையும் இட்டு புட்டு அவியலாக அவித்து எடுத்து இப்புட்டுத் தூளை காலையிலும் மாலையிலும் உணவோடு சேர்த்து சிறிது நல்லெண்ணெய் விட்டு கூட்டு பிசைந்து சாப்பிட்டு வர நீரிழிவு நோய் கட்டுப்பாட்டில் வரும்.

மூலச்சூட்டிற்கு வெங்கா யத்தை தயிரில் நறுக்கப் போட்டு உண்ண மூலச்சூடு தணியும்.

நாட்டு வெங்காயத்தை தோல் நீக்கி சிறு சிறு துண்டு களாக நறுக்கி 1 தேக்கரண்டி அளவு எடுத்து 1 மேசைக்கரண்டி ஆமணக்கு எண்ணெயில் வதக்கிச் சாப்பிட்டால் மலச்சிக்கல் தீரும்.

தாது விருத்திக்கு வெங்காய விதை, 25 கிராம் பால், தேன் அல்லது முட்டை வெங் கருவில் கலந்து தொடர்ந்து சாப்பிடலாம்.

படை, தேமல் போன்றவற்றி ற்கு மருதோன்றி இலையை கைப்பிடி அளவு எடுத்து துணி சலவை செய்ய பயன்படும் சவர்க்காரம் ஒரு துண்டு அதனு டன் சேர்த்து வெங்காயச்சாறு தாராளமாக விட்டு விழுதாக அரைத்து இந்த விழுதை தேமல், படை உள்ள இடங்க ளில் இரவில் வைத்திருந்து காலையில் அரிப்பு தூள் போட்டு தொடர்ந்து சில நாட்கள் கழுவி வர படை, தேமல் அகலும்.

வெற்றிலைச் சாற்றுடன் சம அளவு வெங்காயச் சாறு கலந்து பூசி வந்தாலும் தேமல் மறையும் பெருங்காயத்தை வெங்காயச் சாறு விட்டு விழுதாக அரைத்து தேள் கொட்டிய கொட்டுவாயில் பற்று மாதிரி போட்டால் உடன் தேள் விஷம் இறங்கும். பச்சை



வேப்பிலையை உலற வைத்து வெங்காயத்தின் தோலையும் சம அளவாக சேர்த்து வீட்டில் புகை போட கொசுக்கள் ஒழியும். வெங்காயச்சாறு ஒரு தேக்கர ண்டி, பன்னீரும் 1 தேக்கரண்டி இரண்டையும் நன்கு கலந்து ஒரு சிறு சுத்தமான வெள் ளைத் துணியை இதில் நனை த்து கண்களை மூடிக் கொண்டு கண்ணின் மீது இத்துணியை போடவும். 5 நிமிடங்களுக்கு ஒரு முறை துணியை எடுத்து மீண்டும் போடவும். கண் எரிச் சல், கண்வலி நீங்கும். கண் குளிர்ச்சி பெறும்

குடல் புண்ணுக்கு நன்கு நறுக்கிய சின்ன வெங்காயம் 10 கிராம் ஒரு சிறிய தக்காளிப்ப ழம், ஒரு துண்டு இஞ்சி சிறி யது எடுத்து மேற்றோல் நீக்கி சிறு சிறு துண்டுகளாக நறுக்கி கொள்ளவும் . மேற்கூறிய எல் லாவற்றையும் தயிருடன் சேர் த்து உணவில் கலந்து சாப்பிட்டு வர குடல் புண்ணும் ஆறுவது டன் உடற்சூடும் தணியும். வெங்காயம், மிளகு, சீரகம் சம அளவு எடுத்து இடித்து 4 மட ங்கு தண்ணீர் சேர்த்து பாதி யாக சுண்டக்காய்ச்சி 30 மில்லி அளவு காலை, மாலை அருந்த வரண்ட இருமல் நீங்கும்.

வெங்காய் விதையை உல ர்த்தி பொடித்து சம அளவு சீனி கலந்து 3-4 கிராம் வீதம் காலை, மாலை சாப்பிட்டு வர குன்மம் தீரும். ஆண்மை பெருகும். 40 நாட்கள் தொடர் ந்து சாப்பிட்டு வரலாம்.

வெங்காயத்தளை நெய்யில் வதக்கி உணவோடு சேர்த்து சாப்பிட்டு வர மூலச்சூடு, உடல் வெப்பத்தைத் தணிக்கும்.

**100 கிராம் சிறிய வெங்காயம், பெரிய வெங்காயம், வெங் காயத்தாளிலுள்ள சத்துக்கள்.**

| சத்துக்கள் | பெரியது | சிறியது | வெங்காயத்தாள் |
|---|---|---|---|
| புரதம் | 1.2 கிராம் | 1.8 கிராம் | 0.9 கிராம் |
| கொழுப்பு | 0.1 கிராம் | 0.1 கிராம் | 0.2 கிராம் |
| நார்ப்பொருள் | 0.6 கிராம் | 0.6 கிராம் | 1.6 கிராம் |
| காபோவைதரேற்று | 11.1 கிராம் | 12.6 கிராம் | 8.9 கிராம் |
| கல்சியம் | 46.9 கிராம் | 40 மில்லி கிராம் | 50 மில்லி கிராம் |
| பொஸ்பரஸ் | 50 மில்லி கிராம் | 60 மில்லி கிராம் | 50 மில்லி கிராம் |
| இரும்பு | 0.7 மில்லி கிராம் | 12 மில்லி கிராம் | 7.5 மில்லி கிராம் |
| தயமின் | 0.08 மில்லி கிராம் | 0.08 மில்லி கிராம் | 0 |
| ரைபோஃபிளேவின் | 0.01 மில்லி கிராம் | 0.02 மில்லி கிராம் | 0.03 மில்லி கிராம் |
| நியாமின் | 0.4 மில்லி கிராம் | 0.5 மில்லி கிராம் | 0.3 மில்லி கிராம் |
| விற்றமின் C | 11 மில்லி கிராம் | 20 மில்லி கிராம் | 17 மில்லி கிராம் |
| சோடியம் | ----- | 4 மில்லி கிராம் | 2.2 மில்லி கிராம் |
| பொட்டாசியம் | ----- | 127 மில்லி கிராம் | 109 மில்லி கிராம் |
| செம்பு | --- | --- | 0.14 மில்லி கிராம் |
| போலிக்கமிலம் | 6 மில்லி கிராம் | ------- | ------- |
| கரோட்டின் | ------ | 15 மை.கிராம் | 595 மை.கிராம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முல்லைத்தீவு மாவட்டத்தில்

# சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல்



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சுற்றுச் சூழல் பாதிப்பு, சட்டவிரோத மணல் அகழ்வு, போதைப் பொருள் பாவனை, சட்ட விரோத கசிப்பு உற்பத்தி மற்றும் சட்டவிரோத காடழிப்பு போன்ற செயற்பாடு களை உடனடியாக நிறுத்தி மாவட்டத்தையும் எதிர்கால தலைமுறையினரையும் பாதுகாக்கும் வகையில் விசேட கலந்துரையாடல் ஒன்று கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தானின் தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் (நிர்வாகம்), பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், முல்லைத்தீவு உதவி பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட பொலிஸ் உயரதிகாரிகள், திணைக்களத்தின் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (நி-315)



கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கி வருகின்ற பெண்களுக்கான தேசிய செயலகத்தின் ஏற்பாட்டில் தொழில் நிலையில் முழுமை அடைகின்ற குடும்பம் ஒன்றை உருவாக்கும் நோக்கத்தின் கீழ் பெண் தலைமை தாங்கும் குடும்பப் பயனாளிகள் மூவருக்கு கோழிக்குஞ்சுகள் வழங்கி வைக்கப்பட்டன.(படம்:-யதுபாஸ்கரன்)



மலையக எழுச்சிப் பயணத்தின் மூன்றாவது நாளான நேற்று பேசாலை வெற்றிநாயகி ஆலயத்தில் ஆரம்பமான எழுச்சிப் பயணம் மன்னாரை வந்தடைந்தது.
(படம்:-ஜோசப்நயன்)

## சி.ஐ.டி எனக் கூறி வடமராட்சியில் பணம் அபகரிப்பு

(கரணவாய்)

சி.ஐ.டி எனக் கூறி பணம் அபகரிக்கப்பட்ட சம்பவம் வடமராட்சிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மந்திகை கொடிகாமம் வீதியில் மக்கள் நடமாட்டம் குறைந்த வல்லிபுரக் குறிச்சி வீதியிலேயே இந்த துணிகர செயல் இடம்பெற்றுள்ளது.

முன்னாள் வடமாகாண சபை உறுப்பினரின் தந்தையிடமே 18 ஆயிரம் பணம் அபகரிக்கப்பட்டுள்ளது.

நெல்லியடிப் பகுதியில் வசிக்கும் குறித்த நபர் குடத்தனை பகுதியிலுள்ள நிகழ்வொன்றிற்காக சிறிய ரக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது மக்கள் நடமாட்டமில்லாத பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் குறித்த நபரை வழிமறித்து தாங்கள் கஞ்சா கடத்துவதாக தகவல் வந்துள்ளது.

நாங்கள் சி.ஐ.டி உங்களை சோதிக்க வேண்டும் என கூறி அவரின் பையை சோதித்த போது மற்றவர் அவரை சோதனையிட்டுள்ளார். அதன் பின்னர் அவரை அனுப்பி வைத்தனர்.

குடத்தனைக்கு சென்று பையை பார்த்த போதே பணம் களவாடப்பட்டமை தெரியவந்துள்ளது.

4 வருடங்களுக்கு முன்னர் குறித்த நபரின் வீட்டில் பொருட்கள் களவாடப்பட்டமை தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு எதுவித பலனுமின்றிய நிலையில் விரக்தியடைந்த அவர் குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸ் முறைப்பாடு செய்யவில்லை என தெரியவந்துள்ளது.

குறித்த பகுதியிலுள்ள மக்கள் நடமாட்டமில்லாத இடங்களில் தொடர் கொள்ளைச் சம்பவங்கள் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-60)

## டெங்கு நோயினால் இதுவரை 37 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தில் டெங்கு நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 37ஆக அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இதுவரை 56,228 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், அதில் 27, 883 பேர் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர்.

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் காரணமாக, கடந்த 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடையும் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் நளின் ஆரியரத்ன தெரிவித்தார். (நி)


தேசத்தின் மாபெரும் செல்வப் புதையல்

NLB
NATIONAL LOTTERY

ධන නිධානය

இரட்டிப்பாகிய பரிசுகள்

மேலும்

அதிகரிக்கப்பட்டுள்ளது

20 இலட்சம் முதல் பரிசு

இரண்டு இலட்சம் பரிசுகள்




10 கோடி

சுப்பர் பரிசு

Double Chance
இலட்சாதிபதி

இலக்கம் பொருந்தினால்

தற்போது நாளாந்தம் மேலதிகமாக

ரூ 100,000/= பணப் பரிசில்கள்

(C-2069)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 243





"ஐயா! சுயநல நோக்கத்துடன் ஒருவனைப் பற்றி இல்லாத உயர்வைப் புனைந்து சொன்னால் அது முகஸ்துதியாகும்.

தஞ்சாவூரில் பழுவேட்டரையர்களின் அடிமையாக இருக்கிறானே மதுராந்தகன், அவனிடம் சென்று 'நீ வீராதி வீரன்' என்று நான் புகழ்ந்தால் அது முகஸ்துதியாகும். அப்படி நான் எப்போதாவது செய்ததாகத் தெரிந்தால் என்னை உடனே தங்கள் கையிலுள்ள வாளினால் கொன்று விடுங்கள். தங்களைப் பற்றி நான் சொன்னதில் ஒரு வார்த்தை கூட அதிகம் இல்லையே? பழைய காலத்தில் எந்த வீரன் இவ்வளவு இளம் வயதில் இத்தனை பெரிய காரியங்களைச் சாதித்திருக்கிறான்! தங்கள் பெரிய பாட்டனாராகிய யானை மேல் துஞ்சின இராஜாதித்தியரை ஒருவேளை தங்களுக்குச் சமமாக வேணுமானால் சொல்லலாம் தங்களை விட அதிகம் என்று அவரையும் சொல்ல முடியாது."

"நிறுத்து, பார்த்திபா, நிறுத்து! இராஜாதித்யர் எங்கே? நான் எங்கே? மகா சமுத்திரம் போல் பொங்கி வந்த இராஷ்டிர கூடர்களின் மாபெரும் சைன்யத்தை ஒரு சின்னஞ்சிறு படையை வைத்துக் கொண்டு எதிர்த்து நிர்மூலமாக்கி வீர சொர்க்கம் அடைந்த இராஜாதித்தியரைப் பற்றிப் பேசுவதற்கே நாம் தகுதியற்றவர்கள். அவருடன் நம்மை ஒப்பிட்டுக் கொள்வதா? சோழ குலம் இருக்கட்டும் நீ பிறந்த பல்லவ குலத்தில் முற்காலத்தில் எப்பேர்ப்பட்ட மகாபுருஷர்கள் இருந்தார்கள்! மகேந்திரவர்மரையும் மாமல்லரையும் இனி இந்த நாட்டில் எப்போதாவது காணப் போகிறோமா? தெற்கே துங்கபத்திரையிலிருந்து வடக்கே நர்மதை வரையில் ஒரு குடை நிழலில் ஆண்ட புலிகேசியை வென்று வாதாபியை அழித்து ஜயஸ்தம்பம் நாட்டிய நரசிம்மவர்மர் எங்கே? நீயும் நானும் எங்கே? இந்த மாமல்லபுரத்தைப் போல் ஒரு சொப்பன புரியை நம்முடைய காலத்திலோ நமக்குப் பிற்காலத்திலோ யாராவது சிருஷ்டி செய்ய முடியுமா?. அடடா! ஒரு தடவை நாலு புறமும் நன்றாய்ப் பார், பார்த்திபா! அதோ வில்லுப் பாட்டு நடக்கிறதே, அங்கே உற்றுப் பார்! அம்மாதிரி கற்பாறைகளைக் குடைந்து அற்புத ரதங்களின் வடிவங்களிலே அமைத்தவர்கள் சாதாரண மனிதர்களா? முந்நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு இந்த மாமல்லபுரம் எத்தகைய கோலாகலமான காட்சி அளித்திருக்க வேண்டுமென்று நினைக்கும் போதே எனக்கு உடம்பு சிலிர்க்கிறது! உனக்கு அத்தகைய உணர்ச்சி உண்டாகவில்லையா? உன் முன்னோர்களைப் பற்றி எண்ணும்போது உன் தோள்கள் பூரிக்க வில்லையா?"

"அரசே! சற்று முன்பு தங்களை முகஸ்துதி செய்வதாகச் சொன்னீர்களே? சில சமயம் தங்களிடமுள்ள குற்றங்குறைகளையும் நான் எடுத்துச் சொல்வதுண்டு என்பதை மறந்து விட்டீர்கள். சிற்பம் சித்திரம் கலை என்று வாழ்நாளை வீணாக அடிக்கும் பைத்தியம் தங்களையும் பிடித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பைத்தியம் பிடித்ததினாலேதான் என் முன்னோர்கள் அடைந்த வெற்றியெல்லாம் வீணாக ஆயிற்று.

வாதாபிக்குச் சென்று ஜயஸ்தம்பம் நாட்டி விட்டு மாமல்லர் திரும்பி வந்தாரே? பிறகு என்ன செய்தார்? கற்களைச் செதுக்கிக் கொண்டும் பாறைகளைக் குடைந்து கொண்டும் உட்கார்ந்திருந்தார்! அதன் பலன் என்ன? சில காலத்துக்கெல்லாம் மறுபடியும் சளுக்கர்கள் தழைத்தோங்கினார்கள்.

பெரும்படையுடன் மீண்டும் பழிவாங்குவதற்கு வந்தார்கள். காஞ்சியையும் உறையூரையும் அழித்தார்கள்.

மதுரை வரையில் சென்றார்கள். நெடுமாற பாண்டியன் மட்டும் நெல்வேலியில் சளுக்கர் படையைத் தடுத்து நிறுத்தித் தோற்கடித்திராவிட்டால் இன்று வரை இத் தென்னாடு முழுதும் சளுக்கர் ஆட்சியில் இருந்திருக்கும் அல்லவா?"

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## தங்கத் தூண்டில்



வசந்த் சுந்தர் இருவரும் அண்ணன் தம்பிகள். மீன் பிடித்து வாழ்க்கை நடத்தி வந்தனர். ஒருநாள் நண்பகல் நேரம், அவர்கள் இருவரும் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அப்போது பிச்சைக்காரன் ஒருவன் அங்கே வந்தான். எலும்பும் தோலுமாக இருந்த அவனைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

அவர்களிடம் அவன், "சாப்பிட்டுப் பல நாட்கள் ஆகின்றன. ஏதேனும் உணவு தாருங்கள்!" என்று கெஞ்சினான். இரக்கப்பட்ட வசந்த் அவனுக்கு உணவு தந்தான்.

இதைப் பார்த்த சுந்தர், "அண்ணா! இப்படிப்பட்ட சோம்பேறிகளிடம் இரக்கம் காட்டக்கூடாது!" என்று எரிச்சலுடன் சொன்னான். அடுத்த நாளும் அந்தப் பிச்சைக்காரன் அங்கே வந்தான். அவனுக்கு வசந்த் உணவு தந்தான். மீண்டும் இவன் இங்கே வந்து பிச்சை எடுக்கிறானே என்று கோபம் கொண்டான் சுந்தர்.

"சோம்பேறிப் பயலே! அடுத்த முறை உன்னை இங்கே பார்த்தால் தொலைத்து விடுவேன்!" என்று கத்தினான் சுந்தர். மூன்றாவது நாளும் பிச்சை கேட்டு அங்கே வந்தான் அவன். கோபத்தால் துடித்த சுந்தர் அங்கிருந்த தூண்டில் ஒன்றை எடுத்துக் கொண்டான். அவனைத் தரதர வென்று இழுத்துக் கொண்டு எரிச்சலுடன் வந்தான்.

"இப்படிப் பிச்சை எடுத்து இழிவான வாழ்க்கை நடத்துகிறாயே? உனக்கு மீன் பிடிக்கக் கற்றுத் தருகிறேன். இந்தத் தூண்டிலை வைத்துப் பிழைத்துக் கொள்!" என்றான். அவனுக்கு மீன் பிடிக்கக் கற்று கொடுத்துவிட்டு அங்கிருந்து சென்றான். அதன் பிறகு அந்தப் பிச்சைக்காரன் அவர்கள் வீட்டிற்கு வருவதே இல்லை.

பல ஆண்டுகள் சென்றன. செல்வந்தர் ஒருவர் அழகிய குதிரைகள் பூட்டப்பட்ட வண்டியில் அங்கே வந்தார். அவர் கையில் தங்கத்தால் செய்யப்பட்ட சிறிய தூண்டில் ஒன்று இருந்தது. வசந்தும், சுந்தரும் அவரைப் பார்த்தனர். தங்கத் தூண்டிலை சுந்தரிடம் தந்தார் அவர். "என் அன்புப் பரிசாக வைத்துக் கொள்ளுங்கள்!" என்றார்.

தன் வீட்டிற்கு வந்த பிச்சைக்காரன்தான் அவன் என்பது வசந்துக்கு தெரிந்தது. கோபத்தால் துடித்த அவன், "நீ சாகப் பிழைக்க இங்கே வந்தாய். உனக்கு உணவு தந்துக் காப்பாற்றியவன் நான். எனக்குத்தான் இந்தத் தங்கத் தூண்டில் உரியது. என்னிடம் தா!" என்று கத்தினான். ஆனால், அவரோ, "இது உங்கள் தம்பிக்குத்தான் உரியது!" என்று உறுதியாகச் சொன்னார். இதை வசந்த் ஏற்றுக் கொள்ளவில்லை. வழக்கை நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றான். நடந்ததை எல்லாம் விசாரித்தார் நீதிபதி.

வசந்தைப் பார்த்து அவர், "நீ இவருக்கு உணவு அளித்துக் காப்பாற்றியது உண்மைதான். நீ செய்த உதவி இவர் வாழ்க்கையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை, உன் தம்பியோ இவர் வாழ்வதற்கு வழி காட்டினார். அதைப் பயன்படுத்தி இவர் இந்த நிலைக்கு உயர்ந்தார்.

நிலையான உதவி செய்த சுந்தருக்கு இவர் தூண்டிலைப் பரிசு அளித்தது சரியே. இந்தத் தங்கத் தூண்டில் சுந்தருக்கே உரியது. இதுவே என் தீர்ப்பு!" என்றார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

> தன்னம்பிக்கைதான் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணத் தூண்டும்.
>
> – தானோபஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இன்னமும் தொடர்கின்ற செம்மணி யாத்திரைப் பண்பாடு

1995ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வின் வலியை மனித மொழிகளால் கூறிவிட முடியாது.

அந்தளவுக்கு மிகப்பெரும் துன்பத்தை அந்த இடப்பெயர்வு ஏற்படுத்தியிருந்தது.

யாழ்ப்பாணத்தை நோக்கிய இராணுவப் படையெடுப்பு அதற்கு உதவியாக நடந்த தரை, கடல், ஆகாய மார்க்கமான தாக்குதல் என எங்கும் ஒரே யுத்த மேகம்.

இதன் காரணமாக ஒரு கணப்பொழுதில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறுமாறு விடுக்கப்பட்ட அறிவிப்பு.

என்ன செய்வது, ஏது செய்வது என்று புரியாமல் மக்கள் அதிர்ந்து போயினர்.

அதிலும் குழந்தைகளும் முதியவர்களும் உள்ள குடும்பங்கள் செய்வதறியாது திகைத்தன.

நீங்கள் தப்பிச் செல்லுங்கள். எங்களை நாங்கள் காப்பாற்றிக் கொள்கிறோம் என்ற வயோதிபப் பெற்றோர்களின் பாசமும் பெற்றோர்களைத் தனித்து விட்டு விட்டு நாம் எப்படி எங்களை மட்டும் காப்பாற்றிக் கொள்வது என்ற பிள்ளைகளின் தவிப்பும் சூழ்ந்து கொண்டது.

இப்படியான மிக மோசமான சூழ்நிலையின் வேதனை தாங்க முடியாதவன் போல கதிரவனும் மேற்றிசையில் வீழ்ந்தனன். இருள் சூழ்ந்தது.

இனி யாழ்ப்பாணத்தில் இருப்பது அவ்வளவு நல்லதல்ல என்ற முடிவோடு தென்மராட்சி நோக்கிய யாத்திரை ஆரம்பமாகிறது.

அன்றைய இரவின் தொடக்கம் எங்கே செல்வது என்று தெரியாமல் யாத்திரை தொடங்குகின்ற பொழுதாயிற்று.

அந்தோ! சனக் கூட்டத்தால் செம்மணி வீதி நிறைந்து வழிகிறது. யாரும் அசைய முடியாத அவலம். கூக்குரல்கள் தவறவிட்டவர்களுக்காக ஒலிக்கிறது.

அந்தோ! நல்லூர் முருகன் ஆலய முன்றலில் இருந்து இரவு 7.45 மணிக்கு ஆரம்பமான யாத்திரை செம்மணியில் உள்ள வரவேற்பு வளைவை எட்டுவதற்கு 12 மணித்தியாலங்களும் 45 நிமிடங்களும் ஆயின.

இந்தக் நேரக் கணக்கு செம்மணி யாத்திரையின் அவலத்தை – அது ஏற்படுத்திய தாங்கொணாத் துன்பத்தை வெளிப்படுத்துகின்ற சூத்திரம்.

ஆம், வாழ்நாளில் மறக்க முடியாத செம்மணி யாத்திரை போன்ற அவலத்தை எவரும் அனுபவிக்கக்கூடாது என்பதுதான் நம் பிரார்த்தனை.

எனினும் சிலவேளைகளில், சில இடங்களில் செம்மணி யாத்திரைப் பண்பாடு இருக்கவே செய்கிறது.

ஆம், யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில், யாழ்ப்பாணம் கன்னாதிட்டி றோட்டில் தனியார் கல்வி நிறுவனங்களில் இருந்து மாணவர்கள் வெளியேறும்போது, அங்கும் இங்குமாக வாகனங்கள் வந்து முட்டி நிற்கையில் கடவுளே! செம்மணி யாத்திரையோ இது என்று மனம் ஏங்குகிறது.

ஆகையால் இது விடயத்தில் சம்பந்தப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்கள் உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

போக்குவரத்துப் பொலிஸாரின் சேவையை உரிய நேரத்திலேனும் பெற்றுக் கொள்ள ஆவன செய்ய வேண்டும்.

இல்லையேல் அவ்வீதிப் பயணம் மட்டுமல்ல. அங்கு குடியிருப்பவர்களும் பாவங்கள் என்பதாக நிலைமை ஆகிவிடும்.

# உலக நாடுகளின் ஆதரவை பெறும் கலை பண்டாரநாயக்கவிற்கு பின் எனக்கே உண்டு

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பெருமிதம்

உலகத் தலைவர்களின் ஆதரவைப் பெறுவது ஒரு கலை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அம்பலாங்கொட பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அவர், சிறிமாவோ பண்டாரநாயக்கவிற்கு பின்னர் உலகில் உள்ள அனைத்து நாடுகளுடனும் பலமான உறவைப் பேணிவரும் ஒரே தலைவர் தாம் மட்டுமே என தெரிவித்தார்.

“ADB ஆக இருக்கலாம், IMF ஆக இருக்கலாம், உலக வங்கியாக இருக்கலாம், ஜப்பானின் JICA ஆக இருக்கலாம், அவர்கள் அனைவரிடமும், உலகத் தலைவர்களிடமும் ஆதரவை பெறுவதும் ஒரு வகை கலையாகும்.

எவருடனும் அச்சமின்றி வாதாடத் தயார் என்பதை நிரூபித்து விட்டேன். சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்குப் பிறகு உலகில் உள்ள அனைத்து நாடுகளுடனும் பலமான உறவைப் பேணி அவர்களிடமிருந்து உதவிகளைப் பெற்றவன் நான். ரஷ்யா, சீனா அமெரிக்கா, ஐரோப்பா, இந்தியா, ஜப்பான், ஜெர்மனியுடன் சிறந்த உறவை பேணி நாட்டை கட்டியெழுப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டேன். அந்த ஆதரவைப் பெறுவதில் ஒரு முறையுள்ளது.” என்றார். (4,7)

## தொடர் உண்டியல் திருட்டில் ஈடுபட்ட பலே கில்லாடி கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுதுமலை அம்மன், வைரவர், பிள்ளையார் கோவில்களில் 4 நாட்களுக்கு முன்னர் உண்டியல் உடைத்து கொள்ளை சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர் இதனை யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கீழ் இயங்கும் யாழ்.மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினர்,

சிசிடி கமரா உதவியுடன் நேற்று குறித்த சந்தேகநபரை வண்ணார் பண்ணை சிவன் கோவிலடிக்கு முன்னால் உள்ள உணவகத்தில் வைத்து கைது செய்தனர். விசாரணையின் போது அவரிடம் இருந்து ஒரு தொகை உண்டியல் பணங்களும் மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட கொழும்புத்துறை துண்டியைச் சேர்ந்த 35 வயதுடைய குறித்தநபர் ஏற்கனவே யாழ் நகரப்பகுதியில் ஐந்து கோயில்களில் உண்டியல் உடைக்கப்பட்டு யாழ்மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் ஏற்கனவே கைது செய்யப்பட்டு 3மாதம்வரை சிறையில் இருந்து அண்மையில் தான் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.(4,7,33,104)

## ஜெலட்டின் குச்சிகள் அரியாலையில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், அரியாலை கடற்கரை பகுதியில் ஒரு தொகை ஜெலட்டின் வெடிமருந்து குச்சிகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை மீட்கப்பட்டுள்ளன.

மண்டைதீவு கடற்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த வெடிமருந்து குச்சிகள் மீட்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படாத நிலையில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த வெடிமருந்து குச்சிகளை சட்ட விரோத மீன்பிடிக்கு கடற்தொழிலாளர்கள் பயன்படுத்துவர் என்பது குறிப்பிடத்தக்கது. (4,7,104)

## சட்டவிரோதமாக வெளிநாடு சென்ற 500 ஆசிரியர்கள்

(கொழும்பு)

ஐந்நூறு ஆசிரியர்கள் சட்ட அங்கீகாரம் இன்றி வெளிநாடு சென்றுள்ளதாக மாகாண கல்வி அமைச்சின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆசிரியர்கள் அரச ஊழியர்களுக்கு ஐந்தாண்டுகள் விடுப்பு எடுத்து வெளிநாட்டு வேலைக்குச் செல்ல வழங்கப்பட்ட சலுகையின் கீழ் விண்ணப்பித்தும், அதற்கான அங்கீகாரம் வழங்கப்படவில்லை.

வெளிநாடு செல்வதற்கு தேவையான ஏனைய அனைத்து நடவடிக்கைகளும் நிறைவடைந்துள்ள போதிலும் அனுமதி கிடைக்காத நிலையில் அவர்கள் வெளிநாடு சென்றுள்ளதாக மேற்படி வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

இதேவேளை, ஆசிரியர்களுக்கு விடுமுறை அளித்து வெளிநாடு செல்ல வாய்ப்பு வழங்கப்படாதது அநீதி என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். (4,7)

## மதுபோதையில் விசமிகளால் நிழல்தரு மரங்கள் சேதம்

யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரிக்கு அருகில் மத்தியூஸ் வீதியில் நாட்டப்பட்டிருந்த நிழல்தரும் மரங்கள் சில விசமிகளால் சேதமாக்கப்பட்டு முறிக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு நேரம் கூடிய விசமிகள் மதுபோதையில் நிழல்தரும் மரங்களை முறித்துள்ளதாக அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டினர்.

யாழ் மாநகர சபை முன்னாள் உறுப்பினரின் நிதி ஒதுக்கீட்டில் அபிவிருத்தி செய்யப்பட்ட குறித்த பகுதியில் நிழல்தரும் மரங்கள் லயன்ஸ் கழகத்தின் பங்களிப்புடன் நாட்டப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (4,7,104)

## வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு இடமாற்றம்

(வவுனியா)

வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நியமிக்கப்பட்டிருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சீ.பி.விக்கிரமசிங்கவிற்கே இந்த திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள பொலிஸ்மா அதிபர் காரியாலத்திற்கு இவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதுடன், இவருடைய இடத்திற்கு கொழும்பில் போக்குவரத்து பிரிவு ஒன்றுக்கு பொறுப்பாக இருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, அண்மைக்காலமாக வவுனியாவில் பொதுமக்களுக்கு தனது தொலைபேசி இலக்கத்தை வழங்கி அதன் மூலம் பல குற்றச் செயல்களை கட்டுப்படுத்த துரிதமாக செயற்பட்டு வந்த நிலையிலேயே சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு இவ் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4,7)

## மருந்துகளின் தரம் தொடர்பில் ஆராய விசேட குழு நியமனம்

(கொழும்பு)

2022ஆம் ஆண்டு முதல் இதுவரையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள தரமற்ற மருந்துப் பொருட்கள் தொடர்பாக ஆராய்வதற்காக 15 பேர் கொண்ட விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் சுகாதார அமைச்சுக்கு எதிராக கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளுக்கமைய கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ.பீ.சி. விக்ரமரத்ன இந்த குழுவை நியமித்துள்ளார்.

சுகாதார அமைச்சு வைத்திய விநியோகப் பிரிவு, மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, மருந்து உற்பத்திகள் ஆணைக்குழு, கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் நாட்டின் ஏனைய பிரதான வைத்தியசாலைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வைத்தியர்களே இந்த குழுவின் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தரமற்ற மற்றும் பதிவு செய்யப்படாமல் மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் சுகாதார அமைச்சு ஆகியவற்றுக்கு எதிராக தெரிவிக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளை கருத்திற்கொண்டு இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்தார். (4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

29



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இதேவேளை சோழருக்கு எதிரான பாண்டியர், சேரருடன் நல்லுறவையும் வளர்த்துக் கொண்டனர். இதேவேளை அவ்வப்போது ருகுணு இராச்சியத்தின் மீது சோழர் படைகள் தாக்குதல் நடத்தினாலும் ருகுணுவைக் கைப்பற்றும் நோக்கம் அவர்களுக்கு இருக்கவில்லை.

விக்கிரமபாகுவின் படைபெருக்கும் நடவடிக்கை எதிர்பார்த்ததை விட மிகவும் நீண்டகாலம் எடுத்து சுமார் எட்டு வருடங்கள் தொடர்ந்தது. ஆயினும் பெருக்கிய படை மூலம் சோழர் மேல் படையெடுக்க முன்னர் விக்கிரமபாகு நோய் வாய்ப்பட்டு தெய்வேந்திர முனையில் மரணமடைந்தான்.

கி.பி 1070 வரை இலங்கையில் நீடித்த சோழர் ஆட்சி பல்வேறு காரணங்களால் வீழ்ச்சியுற ஆரம்பித்தது. முதலாம் விக்கிரமபாகுவிற்கு நேரடி வாரிசுகள் இல்லாத காரணத்தினால் அரசாட்சிக்கான போட்டி ருகுணு இராச்சியத்தில் அரங்கேறியது. இந்த நிலைமையை சோழர்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். பதவிக்குப் போட்டியிட்ட ஐந்து இளவரசர்களில் மூன்று இளவரசர்கள் சோழர் படைகளினால் வெற்றிகரமாகக் கொலை செய்யப்பட்டனர்.

### மகாலானகீர்த்தி (1040)

மகாலான கீர்த்தி என்பவன், இலங்கையைச் சோழர் கைப்பற்றி ஆண்ட காலத்தில், மன்னனாக முடிசூட்டிக் கொண்டு ருகுனுவில் இருந்து ஆட்சி செய்தவன் ஆவான். ஆறாம் காசியப்பன் (விக்கிரமபாகு) இறந்த பின்னர் சிறிது காலம் படைத் தலைவனாக இருந்த கீர்த்தி என்பவன் ஏழு நாட்கள் அதிகாரத்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தான். மகாலான கீர்த்தி அவனைக் கொன்று விட்டு தானே அரசன் என முடிசூட்டிக் கொண்டு ருகுனுவில் இருந்தான். இவனது மூன்றாவது ஆட்சியாண்டில் சோழருடன் நிகழ்ந்த போரில் தோல்வி அடைந்த மகாலான கீர்த்தி, தன் கையாலேயே தனது தலையை வெட்டிக் கொண்டு இறந்து போனான். சோழர்கள் மீண்டும் முடியையும் பிற செல்வங்களையும் எடுத்துச் சென்றனர். இவனுக்கு பின்சோழருக்கு பயந்து அடைக்கலம் வேண்டி வந்த பாண்டிய இளவரசர்கள் சிங்கள அரசர்களாக ருகுனு இராச்சியத்தில் முடிசூட்டி கொண்டனர்.

### விக்கிரமபாண்டியன் (1042)

பாண்டிய நாட்டிலிருந்து புகலிடம் தேடிவந்த விக்கிரமபாண்டியன் என்பவன் களுத்துறையிலிருந்து சிறிது காலம் ருகுனுவை ஆட்சி நடத்தினான்.

### ஜகதிபாலன் (1043)

இதனிடையே இந்தியாவிலுள்ள அயோத்தியைச் சேர்ந்த மற்றோர் இளவரசனான ஜகதிபாலன் இலங்கை வந்து, விக்கிரமபாண்டியனை வென்று ஆட்சி பெற்றான். நான்கு ஆண்டுகள் ஆட்சி செய்தபின், இவனும் சோழருடன் நிகழ்ந்த போரில் மடிந்தான்.

### பராக்கிரம பாண்டியன் (1046)

ஜகதிபாலன் சோழருடன் நிகழ்ந்த போரில் மடிந்தபின், ருகுணையில் அரசைப் பெற்றவன் பராக்கிரம பாண்டியன் ஆவான். இவனும் ஈராண்டுகளுள் சோழரின் வாளுக்கு இரையானான். அதன்பின் திரிலோக பாண்டியனும் (1048) அவனை அடுத்து 7ஆம் காசியப்பனும் (1054) ருகுணையை ஆண்டதாக கூறப்பட்டுள்ளது.

### முதலாம்விஜயபாகு

அநுராதபுர இராச்சியம் வீழ்ச்சி கண்டபின் இவ்வித நிகழ்ச்சிகளே ருகுனை அரசியலில் இடம்பெற்றன.

கி.பி 1055 இல் முதலாம் விஜயபாகு எனும் அரசன் பதவியேற்றுக் கொண்டான். பதவி ஏற்ற விஜயபாகு சோழர்களின் இலங்கைத்தலைநகரமான பொலநறுவையைக் கைப்பற்றத் திட்டம் தீட்டினான்.

விஜயபாகுவின் எழுச்சியைக் கண்டு அஞ்சிய சோழர் ருகுணு இராச்சியத்தின் மீது போர் தொடுத்த போது மன்னன் பின் வாங்கவே கதிர்காம நகரைக் கொள்ளையிட்டு மீண்டனர். எனினும் அப் பிரதேசத்தை அவர்களால் வெற்றிகொள்ள இயலவில்லை.

கி.பி 1066 இல் தனது முதலாவது தாக்குதலை பொலநறுவை மேல் நடத்தினான். இதன் போது பொலநறுவை நகரத்தை வெற்றிகரமாகக் கைப்பற்றினாலும் சிறிது நாட்களில் தென்னிந்திய சோழ சாம்ராச்சியத்தில் இருந்து கிடைத்த மேலாதிக்கப் படையுதவி காரணமாக சோழர் மீளவும் விஜயபாகுவை விரட்டித் தமது தலைநகரத்தைக் கைப்பற்றிக் கொண்டனர்.

1069-1070 காலப்பகுதியில் சோழ இராச்சியத்தில் உள்நாட்டு யுத்தம் உருவானது. இதன் காரணமாக சோழ அரசிற்கு இலங்கை பற்றி கவலைப்படும் நிலையில் இருக்கவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய விஜயபாகு தனது இரண்டாவது தாக்குதலைப் பொலநறுவை மீது ஏவினான். மூன்று முனைகளில் படைகளை ஏவிய விஜயபாகு மேற்குப் பக்கமாக ஒரு படையணியை அனுப்பி, மாந்தை மூலம் சோழர் உதவிப்படை அனுப்பினால் அதை எதிர்கொள்ள தயாரானான். அதே வேளை மேற்கு, கிழக்கு பகுதிகளால் இரண்டு படையணிகளையும் நேரடியாக தெற்கிலிருந்து தனது தலைமையில் பிரதான படையணியையும் கொண்டு பொலனறுவையை முற்றுகையிட்டான். சுமார் 17 மாதங்கள் தொடர்ந்த முற்றுகை விஜயபாகுவிற்கு வெற்றியாக அமைந்தது. கி.பி 1070 இல் பொலன்னறுவையைத் தலை நகரமாகக் கொண்டு விஜயபாகு இலங்கையின் மன்னனாக முடிசூடிக் கொண்டான்.

17 வருடங்கள் தொடர்ந்த இடைவிடாத தாக்குதல் மூலம் சோழர் படைகளை இலங்கையில் இருந்து வெளியேற்றியதுடன் இலங்கையை ஒரு குடையின் கீழ் ஒருங்கிணைத்தான். இந்தப் போரில் சோழர்களின் எதிரியான பாண்டியர்களின் உதவி, முதலாம் விஜயபாகுவுக்கு கிட்டியதாகவும் கூறப்படுகின்றது.

சோழர்கள் தமது சமூக, சமய, கலை நடவடிக்கைகளுக்காக இலங்கையில் பல இந்துக் கோயில்களை தோற்றுவித்தனர். தமிழகத்தைப் போன்று இலங்கையிலும் இந்து மதம் கோயில்களை மையமாகக் கொண்டு வளர்ச்சி பெற்றது. சோழர்களால் மேற் கொள்ளப்பட்ட இந் நடவடிக்கை சுதேச சிங்கள மன்னர்கள் காலம் வரை தொடர்ந்தது. தென்னிந்தியாவில் பெருமளவில் தோற்றுவித்த கோயில்களைப் பின் பற்றி சோழர்கள் இலங்கையிலும் பல புதிய கோயில்களை உருவாக்கியதோடு கோயில் வழிபாட்டு முறைகள், கோயில் சார்ந்த சமூக நடவடிக்கைகள் போன்றவற்றையும் பரப்பினர்.

சோழர்கள் அமைத்த பெருமளவிலான கோயில்கள் கூடுதலாக நகரங்களிலும், துறைமுகப் பட்டினங்களிலும் காணப்படுகின்றன. பதவியா, கந்தளாய், திருகோணமலை, மாதோட்டம், பொலநறுவை, குருணாகல போன்ற இடங்களில் கோயில்கள் இருந்தமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. சோழர் காலக் கோயில்கள் பெரும்பாலும் சோழ அரச குடும்பத்தவர்களினுடய பெயர்களைக் கொண்ட கோயில்களாக விளங்கின. உதாரணமாக வானவன்மாதேவி ஈஸ்வரம் (பொலநறுவை), இராஜராஜேஸ்வரம் (மாதோட்டம்), உத்தமசோழ ஈஸ்வரம் (அட்டகட்டே). இலங்கையில் இது வரை கி.பி11 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 13ஆம் நூற்றாண்டுவரையான காலப் பகுதிக்குரிய 30இற்கும் மேற்பட்ட சைவ, வைஷ்ணவ கோயில்களின் அழிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

1 ஆம் விஜயபாகு சோழரை வெற்றி கொண்டு இலங்கைக்கு அரசியல் சுதந்திரம் பெற்றுக் கொடுத்த போதும் பண்பாட்டுத் துறையில் பூரண சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுக்க முடியவில்லை. இதனையே பேராசிரியர் பரணவிதான பின்வருமாறு குறிப்பிடுகிறார். "1ஆம் விஜயபாகு அரச கட்டிலேறின பின்னர் இந்து மத வழிபாட்டு முறைகளைப் புறக்கணிக்க முடியவில்லை. இவன் சோழர்கால சமய ஸ்தானங்கள் தொடர்ந்து இயங்க அனுமதித்ததோடு தனது காலத்தில் அமைக்கப்பட்ட சைவக் கோயில்களுக்கும் தனது ஆதரவை வழங்கினான்."

மேலும் விஜயபாகுவின் ஆட்சியின் இறுதிக் காலத்தில் சோழ அரசுக்கும் இலங்கைக்கும் சமூக உறவுகள் நிலவியதாக கூறப்பட்டுள்ளது. குலோத்துங்க சோழனின் மகளொருத்தியை இலங்கை இளவரசன் ஒருவன் மணம் செய்ததால் 1ம் பராந்தகன் காலத்திலிருந்து இரு அரச குடும்பங்களிடையே நிலவி வந்த பகைமை முடிவெய்தியது.

(தொடரும்...)



பொலன்னறுவையில் காணப்படும் சோழர் காலத்து வரலாற்று சின்னங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓமந்தையில்...

பழுதடைந்து நின்ற கப்ரக வாகனம் ஆகியவற்றுடன் அதே திசையில் பயணித்த பாரவூர்தி மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் கப்ரக வாகனத்தில் இருந்த இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததோடு படுகாயமடைந்த மற்றொரு நபர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தில் 23 வயதுடைய இராமச்சந்திரன் சதீஸ்குமார் என்ற இளைஞரே மரணமடைந்துள்ளார் என்றும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4-7,250)

## தையிட்டி...

அகற்ற வேண்டுமென வலியுறுத்தியும் தனியார் காணிகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென வலியுறுத்தியும் கடந்த மே 03ஆம் திகதி தொடக்கம் எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டு வருகின்றது.

அதன் தொடர்ச்சியாக இன்று மாலை 4.00 மணிக்கு ஆரம்பித்து நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணி வரை சட்டவிரோதமான திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்திற்கு எதிரான கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

இப்போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொண்டு வலுச் சேர்க்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (4-7,104)

## துப்பாக்கிச் சூடு...

ஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொலை செய்யப்பட்ட நபர், வெளிநாட்டில் பதுங்கியிருக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான தனுகவின் சகா என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவர் சில நண்பர்களுடன் உணவு உண்பதற்காக ஹோட்டலுக்கு முன்னால் காத்திருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த இருவரில் ஒருவர் இளைஞர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார். (4-7)

## வரட்சி தொடரு...

என அமைச்சர் தெரிவித்தார்.

தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு கால்நடைத் தீவனம் மற்றும் எத்தனோல் உற்பத்திக்கான அரிசி விநியோகத்தை நிறுத்த வேண்டிய நிலை ஏற்படும் என அமைச்சர் மகிந்த அமரவீர சுட்டிக்காட்டியுள்ளார். (4-7)

## ஆட்சி மாறியும்...

தெரிவித்தார்.

மொனராகலை பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, உலகில் எந்த நாடும் சேதன பசளை திட்டத்தை விவசாயத்துறையில் முழுமையாக அமுல்படுத்தவில்லை. எமது அரசாங்கம் சேதன பசளை திட்டம் தொடர்பில் எடுத்த தவறான தீர்மானம் விவசாயத்துறையில் பாரிய எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தியது. விவசாய குடும்ப பின்னணியை கொண்ட ராஜபக்ஷர்கள் விவசாயத்துக்கு எதிராக ஒருபோதும் செயற்படவில்லை. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேசிய உற்பத்தியை மேம்படுத்தும் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கினார்.

காலிமுகத்திடல் போராட்டத்தை தொடர்ந்து நாங்கள் பதவி விலகினோம். ஆனால் மக்களின் எதிர்பார்ப்பு ஏதும் நிறைவேற்றப்பட வில்லை. இதுவே யதார்த்தம். அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினோம். ஜனாதிபதியின் புதிய லிபரல்வாத கொள்கை நாட்டு மக்களுக்கு பய னுடையதாக அமைய வேண் டும்.

போராட்டத்தின் ஊடாக ராஜபக்ஷர்களை ஒரு போதும் வீழ்த்த முடியாது. மக்களாணையுடன் மீண்டும் ஆட்சியை கைப்பற்றுவோம். ராஜபக்ஷர்களை அரசியலில் இருந்து புறக்கணிக்க ஒரு தரப்பினர் இன்றும் முயற்சிக்கிறார்கள். மகிந்த ராஜபக்ஷ மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை நாங்கள் பாதுகாப்போம் எனத் தெரிவித்தார். (4-7)

## எரி...

டுள்ளதாக இந்தியா அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பை தொடர்ந்து அதற்கான ஒத்துழைப்பை முழுமையாக வழங்குவதாக ஜனாதிபதி அலுவலக பிரதானி சாகல ரத்நாயக்க இந்தியாவுக்கு தெரியப்படுத்தியுள்ளார். இந்தியாவின் தென்பகுதியின் நாகப்பட்டினத்தை அண்மித்த பிரதேசத்திலிருந்து இலங்கையை நோக்கி எரிபொருள் விநியோக குழாய் திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

கடலுக்கு அடியில் முன்னெடுக்கப்படவுள்ள இந்த குழாய்த் திட்டமானது இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கை நோக்கி முதல் கட்டமாக விஸ்தரிக்கப்பட உள்ளது. வடக்கில் மன்னார் மற்றும் வவுனியா வரையிலும், கிழக்கில் திருகோணமலை வரையிலும், இதன் பிரதான எரிபொருள் குழாய் கொழும்பு வரைக்கும் விஸ்தரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. (4-7)


கனகலிங்கம் திலகவதி
NLB, DLB யாழ்.முகவர்
28.07.2023 விசேட மஹஜன சம்பத லொத்தரில் கனகலிங்கம் முகவர் ஊடாக ஒரே சீட்டிழுப்பில் 3 ஒரு இலட்சம் ரூபாய் பணப் பரிசு வெல்லப்பட்டது.
14.07.2023 அன்று லக்கி செவின் விசேட லொத்தர் சீட்டிழுப்பில் கனகலிங்கம் திலகவதி முகவரூடாக 4 ஒரு இலட்சம் ரூபாயும் 2 இரண்டு இலட்சம் ரூபாயும் ஒரு தங்க நாணயமும் வெல்லப்பட்டுள்ளது.
27.07.2023 கனகலிங்கம் சிவிகரன் திருநெல்வேலி முகவரூடாக மெகா பவர் சீட்டிழுப்பில் 2 இலட்சம் ரூபாய் வெல்லப்பட்டுள்ளது.
15.07.2023 மஹஜன லொத்தர் சீட்டிழுப்பில் ஒரு இலட்சம் ரூபாய் வெல்லப்பட்டுள்ளது.
கனகலிங்கம் திலகவதி முகவர்கள்
இல.4, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
077 603 1723
(16569)



மெகா பவர் — திகதி 30/07/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1539 — I 03 05 55 57 67 — 77658

தன நிதானய — திகதி 2023.07.30 — சீட்டிழுப்பு இலக்கம் 1221 — L 09 12 13 42 L — 14726

லக்கி 7 — திகதி 30.07.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 017 — L7 இலக்கம் 1 1 — வெற்றி இலக்கினம் மிதுனம் — வெற்றி இலக்கங்கள் 7 7 7 7 0 0

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3433 — சீட்டிழுப்பு திகதி 30.07.2023 — K 11 57 59 62 — K 31235

ஹந்தஹன HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2023.07.30 — சீட்டிழுப்பு இலக்கம் 500 — மகரம் 16 37 47 50 மகரம்

மஹஜன சம்பத — திகதி 2023/07/30 — சீட்டிழுப்பு இலக்கம் 5191 — N 4 2 7 8 4 9

சுப்பர் போல் — சீட்டிழுப்பு வாரம் 2165 — வர்ணம் செம்மஞ்சள் — சீட்டிழுப்பு திகதி 2023.07.30 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 05 16 28 69 K — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,212,452.40 — இரண்டாம் வரம் 36 41 50 61 D

சனிதா — திகதி 2023.07.30 — வெற்றி வாரம் 4326 — 05 13 23 36 K — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,703,808.00 — இரண்டாம் வரம் 16 39 56 58 Z

கப்ருக — திகதி 30.07.2023 — வெற்றி வாரம் 1341 — வர்ணம் மஞ்சள் — H 06 09 49 56 73 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 422,647,774.20 — இரண்டாம் வரம் 05 37 38 58 V — தொலை பேசி 011-2 333 546-47 — Web : www.dlb.lk

சசிரி — வெற்றி வாரம் 356 — 2023.07.30 — கபிலம் — 10 20 29 — 07 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,645,720/-

ராசி — சீட்டிழுப்பு வாரம் 3877 — வர்ணம் ஊதா — சீட்டிழுப்பு திகதி 2023.07.30 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 01 11 32 60 — மகரம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,540,056/- — இரண்டாம் வரம் 16 21 23 31

சங்வர்தன வாசனாவ — உத்தியோகபூர்வ முடிவுகள் — வெற்றி வாரம் 615 — திகதி 2023-07-29 — வர்ணம் ஆரஞ்சு நிறம் — T 14 15 67 02 — எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 22,365,992.00 — DLB DEVELOPMENT LOTTERIES — தொ. பே.: 0112 333 546/47 — Web: www.dlb.lk

கப்ருக — திகதி 2023.07.29 — வெற்றி வாரம் 1340 — வர்ணம் சிவப்பு — Q 34 02 11 16 40 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 422,337,774.20 — இரண்டாவது வாய்ப்பு 12 15 33 46 D

அத கோடிபதி ADA KOTIPATHI — ஞாயிற்றுக்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,201,480/- — வெற்றி வாரம் 1991 — வர்ணம் இளம் பச்சை — சீட்டிழுப்பு திகதி 2023.07.30 — 24 32 63 75 T — இரண்டாம் வரம் 34 48 52 65 X


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலில்...

முக்கிய உறுப்பினர்கள் எடுத்துரைத் துள்ளனர்.

ஏனெனில் 69 இலட்சம் பெரும்பான் மையை கொண்ட உண்மையான மக்கள் ஆணை பொதுஜன பெரமுனவுக்கே உள்ளது. கோட்டபாய ராஜபக்ஷவை முன்னிறுத்திய கடந்த ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுனவின் "சௌபாக்ய தெக்ம" என்ற கொள்கை திட்டத்தில் 13 ஆவது திருத்தம் குறித்து எந்தவொரு உறுதிமொழியோ இல்லை. கோட்டபாய ராஜபக்ஷ ஜனாதிபதிப் பதவியை துறந்துள்ள நிலையில் அவருடைய பதவிக் காலத்தின் எஞ்சிய காலத்திற்கான ஜனாதிபதியாகவே ரணில் விக்கிரமசிங்க உள்ளார்.

பாராளுமன்றத்தில் இன்றும் பொதுஜன பெரமுனவே பெரும்பான்மையை கொண்ட கட்சியாக உள்ளது.

எனவே கொள்கைக்கு எதிராக தீர்மானிக்க தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இயலாது என்ற விடயத்தை தெளிவாக எடுத்துரைக்க வேண்டும் என்ற கோரிக்கையை பஷில் ராஜபக்ஷவிடம் எடுத்துரைத்துள்ளனர்.

இதனை தொடர்ந்து பொதுஜன பெரமுனவின் இறுதி தீர்மானத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அஸ்கிரிய மற்றும் மல்வத்து உட்பட ஏனைய உயர் பௌத்த பீடங்களுக்கும் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (4,7)

## ரணில்...

செய்தியை அறிவிப்பு செய்தால் ஐக்கிய மக்கள் சக்தியில் யாரும் இருக்கப்போவதில்லை என அமைச்சர் ஹரின் பெர்ணாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்த வருடம் நடுப்பகுதியில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும். அதில் சந்தேகம் இல்லை. ஆனால் ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க போட்டியிட வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

நாட்டின் தற்போதைய நிலையில் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண அனுபவம் திறமையுள்ள தலைவர் நாட்டுக்கு தேவை. அந்த தகுதிகள் அனைத்தும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருக்கின்றன.

விழுந்திருந்த நாட்டை மீள கட்டியெழுப்பி தனது இயலுமையை செயற்பாட்டில் காட்டி இருக்கிறார். அதனால் இன்று மக்கள் மனதில் இருக்கும் ஒரே தலைவராக ரணில் விக்கிரமசிங்கவே இருந்து வருகிறார்.

அத்துடன் இடம்பெற இருக்கும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார் என்ற செய்தியை உத்தியோகபூர்வமாக அறிவிப்பு செய்த பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியில் யாரும் இருக்கமாட்டார்கள். அனைவரும் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்துகொண்டு ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக அர்ப்பணிப்பார்கள்.

அத்துடன் கடந்த அரசாங்கத்தின் பிழையான தீர்மானங்களால் நாடு வீழ்ச்சியடைய ஆரம்பித்தபோது, நாட்டை நிர்வகிக்கும் பொறுப்பு தனக்கு வரும் என்பதை ரணில் விக்கிரமசிங்க எதிர்பார்த்தே இருந்துள்ளார். இது தொடர்பாக நானும் பாராளுமன்றத்தில் இருந்துகொண்டு திருட்டுத்தனமாக ரணில் விக்கிரமசிங்கவுடன் கதைத்துவந்தேன்.

அதன்போதெல்லாம், சற்று பொறுமையாக இருங்கள். இன்னும் சில மாதங்களில் இவர்கள் வீழ்ச்சியடைந்து அரசாங்கம் பறிபோகும் என அவர் என்க்கு தெரிவித்தார். அவர் தெரிவித்த பிரகாரமே ராஜபக்ஷ அரசாங்கம் வீழ்ச்சியடைந்தது.

மேலும் நாடு வங்குரோத்து அடைந்து, நாட்டை பொறுப்பேற்க யாரும் முன்வராத நிலையில் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தனிநபராக இருந்து வீழ்ச்சியடைந்திருந்த நாட்டை மீள கட்டியெழுப்ப முன்வந்தார்.

நாட்டை கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்துக்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கு பாரியதொரு சக்தியை வழங்கவேண்டியது எமது பொறுப்பு. அதனால் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி ஐக்கிய தேசிய கட்சிபாரிய சம்மேளனம் ஒன்றை நடத்த இருக்கிறது. அதில் அடுத்துவரும் 2048 வரை நாட்டை கட்டியெழுப்புவது ஐக்கிய தேசிய கட்சி மாத்திரமாகும் என்பதை உறுதியாக தெரிவிப்போம் என்றார். (4,7)

## ஒரு சிறுநீரகத்தை அகற்றுவதற்கு பதில் இரண்டையும் அகற்றியதில் சிறுவன் பலி



(கொழும்பு)

கொழும்பு லேடி ரிஜ்வே வைத்தியசாலையில் சிறுநீரக சத்திரசிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட சிறுவனின் மரணம் தொடர்பிலும், மருத்துவர்களின் செயற்பாடு தொடர்பிலும் முன்னுக்குப்பின் முரணான தகவல்கள் ஆதாரங்களுடன் வெளிவந்திருக்கின்றன.

சத்திர சிகிச்சை மேற்கொண்ட மருத்துவர்கள் தமது தரப்பில் தவறு நடந்ததை குழந்தையின் பெற்றோரிடம் ஒப்புக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு கொட்டாஞ்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று வயதான ஹம்தி எனும் சிறுவன் கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக சிறுநீர் தொற்று நோயினால் அவதிப்பட்டு வந்துள்ளார்.

இதனையடுத்து அச் சிறுவனை லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் பரிசோதித்தபோது, சிறுவனின் இடது சிறுநீரகத்தில் இருந்த குறைபாடு காரணமாக அவனது இடது சிறுநீரகத்தை நீக்க வேண்டும் என்று மருத்துவர்கள் சிறுவனின் பெற்றோருக்கு ஆலோசனை வழங்கியிருந்தனர்.

செயலிழந்து இருக்கும் இடது பக்க சிறுநீரகத்தை அகற்றுவதற்கான சத்திர சிகிச்சை கடந்த வருடம், மேற்கொள்ளப்பட்டது.

இந்த சத்திரசிகிச்சையின் பின்னர் சிறுவனுக்கு சிறுநீரை வெளியேற்றுவதில் ஏற்பட்ட சிரமத்தைத் தொடர்ந்து மீண்டும் ஸ்கான் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்த ஸ்கான் பரிசோதனையில் இரண்டு சிறுநீரகங்களும் அகற்றப்பட்டிருப்பது தெரிய வந்தது. அதன் பின்னர், சத்திர சிகிச்சை மேற்கொண்ட மருத்துவர்கள் தமது தரப்பில் தவறு நடந்ததை குழந்தையின் பெற்றோரிடம் ஒப்புக் கொண்டுள்ளனர்.

அதாவது பாதிக்கப்பட்டிருந்த இடது பக்க சிறுநீரகத்துடன் வலது பக்க சிறுநீரகமும் தவறுதலாக அகற்றப்பட்டுள்ளதாக அவர்கள் கூறியுள்ளனர்.

சிறுவனுக்கு எப்படியாவது சிறுநீரகம் ஒன்றை பொருத்தி அவனை குணப்படுத்துவதாக அந்த மருத்துவர்கள் வாக்குறுதியளித்துள்ளனர். இயந்திரத்தின் உதவியுடன் கடுமையான வலிகளுடன் சிறுவன் கடந்த ஏழு மாதங்களை கடத்தியுள்ளார்.

எனினும் இந்த விவகாரத்தை வெளியே கசிய விட வேண்டாம், தம்மால் முடிந்த அனைத்தையும் செய்வோம் என்று மருத்துவர்கள் வழங்கிய வாக்குறுதியை ஹம்தியின் பெற்றோர் முழுமையாக நம்பியிருந்துள்ளனர்.

அதன் பிரகாரம் அவர்கள் மருத்துவர்களுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கியிருந்தனர். நாட்கள் செல்லச் செல்ல மருத்துவர்கள் வழங்கியது வெறும் பொய் வாக்குறுதிகள் என்பது தெரிய வந்தது.

அந்தச் சிறுவன் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் உயிருக்காக போராடிக் கொண்டிருந்தார். மருத்துவர்களால் கைவிடப்பட்ட பெற்றோர்கள் செய்வதறியாது தவித்தனர்.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை சிறுவன் ஹம்தி உயிரிழந்தார்.

ஒரு வாரகாலமாக "கோமா" நிலையிலிருந்த சிறுவன், விஷக் கிருமி உடலில் புகுந்ததால் ஏற்பட்ட மரணம் என வழமையாக விடுக்கும் அறிக்கையை மருத்துவமனை நிர்வாகம் வெளியிட்டதாக கூறப்படுகிறது. (4,7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16550) 076 825 7716 (ஆகாஸ்)



விற்பனையாளர் தேவை

யாழ். நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவம் உள்ள பழக விரும்பும் ஆண்,பெண் விற்பனையாளர் உடன் தேவை.

NOTE

I.அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

II.கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு (16570)

077 748 8093, 074 073 4830


## இந்திய...

துள்ளார்.

நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர்,

"இலங்கை மீதான சீனாவின் தவிர்க்கமுடியாத காலூன்றலை சமப்படுத்தும் நோக்குடனேயே இந்திய - இலங்கை பால விவகாரம் மோடியினால் வெளிப்படுத்தப்படுள்ளது.

அப்படியானதொரு தரைவழி பாலம் அமைக்கப்பட்டால் இந்திய இராணுவம் ஒருமணி நேரத்துக்குள் இலங்கையை ஆக்கிரமிப்பு செய்யும்.

எதிர்காலத்தில் சீனா - இந்தியாவுடன் போர்தொடுக்குமாக இருந்தால், அமைதியான முறையில் இந்திய துருப்புக்கள் இலங்கை வருவதற்கான சிறந்த வழியாக இது பார்க்கப்படுகிறது.

இலங்கை ஜனாதிபதி இந்தியாவிற்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட போது கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் இந்தியாவின் நலனை மையப்படுத்தியே அமைந்திருந்தன.

அதில் இந்திய, இலங்கை மீது குறி வைத்த முக்கிய விடயம், இந்திய நாணயத்தை இலங்கையில் பயன்படுத்தும் திட்டம் என தெரிவித்தார். (4,7)

## வல்லையில்...

(கரணவாய்)

வல்லை தொண்டைமானாறு வெளியில் நேற்று முன்தினம் தீப்பரவல் ஏற்பட்டது.

அதனையடுத்து விரைந்து செயற்பட்ட வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை ஊழியர்கள் தீயினை கட்டுக்குள் கொண்டுவந்தனர். (4,7,60)


CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-6982) 0777-068-777 V2 TRAVELS

49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்

WORK IN UK

WORK PERMITS

CONSTRUCTION WORKERS

5 YEAR WORK PERMITS

BRICK LAYERS · SHUTTERING CARPENTERS · SHUTTERING JOINERS · STEEL FIXERS · ELECTRICIANS · PLUMBERS · STEEL ELECTORS FOR STRUCTURES

CIMS COLLEGE 0777-068-777

VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை இனி வரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில்...

கட்டணம் - 2800/= (16349)

TP:077 544 8503

குத்தகைக்கு தேவை

வான்கள்/ கார்கள் குத்தகைக்கு தனியார் கம்பனிக்கு தேவை. தகுந்த பெறுமதி வழங்கப்படும். (16565)

077 971 5379


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் ... யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.